Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 தை 15 திங்கட்கிழமை (28.01.2013) பக்கங்கள் 20 ஓசை – 120
















# பதற்ற சூழலை ஏற்படுத்த பத்திரிகைகள் முயற்சி

## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

தற்போது ஏற்பட்டுள்ள அமைதியான சூழலை இல்லாதொழித்து பதற்றமான சூழலை ஏற்படுத்தும் வகையில் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டியுள்ளார். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற யாழ். மாவட்டத்தின் தொழிற்துறை திணைக்களங்களின் பணியாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

19 ஆம் பக்கம் பார்க்க

## கமலேஷ் சர்மா 10 இல் விஜயம்

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா இலங்கை வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதியில் இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாடு குறித்த ஏற்பாடுகளை ஆராயும் நோக்கிலேயே அவரது வருகை அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு வருகைதரும் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்து உரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் கனடா கலந்துகொள்ளப் போவதில்லையென அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யுத்தத்திற்குப் பிந்திய வடக்கின் நிலை யாழ். ஆயருடன் அமெரிக்க குழு பேச்சு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்திற்குப் பிந்திய வட பகுதியின் அரசியல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக அமெரிக்க சிரேஷ்ட இராஜதந்திரிகள் குழு, யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்த அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர்களான ஜேம்ஸ்மூர், ஜேம்ஸின் பர்மன் மற்றும் ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்பு அலுவலகத்தின் தெற்கு மற்றும் தெறகாசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச்



செயலாளர் விக்ரம் ஜே சிங் ஆகிய மூவரடங்கிய குழு சுமார் ஒரு மணிநேரம் ஆயர் இல்லத்தில் பேச்சுக்களை நடத்தியது.

இந்தச் சந்திப்புக் குறித்து யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவிக்கையில், நாட்டில் யுத்தம் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ உள்ளக விசாரணை அமெரிக்கா கடும் விசனம்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்கள் எவரும் காணாமற்போகவில்லை என இலங்கை இராணுவத்தின் உள்ளக விசாரணை அறிக்கையில் தெரிவித்திருப்பது குறித்து அமெரிக்கா மிகுந்த விசனம் அடைந்துள்ளதென இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அந்நாட்டு தூதுக்குழு தெரிவித்ததாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜெனிவாவில் கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் குறித்து இலங்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆட்கடத்தல் மீதான குற்றச்சாட்டு இரத்துச் செய்ய உத்தரவு

ஓசியன் லேடி கப்பலின் மூலம் சட்டவிரோதமான முறையில் ஆட்களை கனடாவிற்கு அழைத்துச் சென்றதாக குற்றஞ் சுமத்தப்பட்டிருந்த நால்வர் மீதான குற்றச்சாட்டுக்களை இரத்துச் செய்யுமாறு கனேடிய பிரிட்டிஷ் கொலம்பிய உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவு கடந்த வெள்ளிக்கிழமை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கனேடிய இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. கனேடிய ஆட்கடத்தல் சட்டத்தின் கீழ், இந்தத் தீர்மானம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கமல்ராஜ் கந்தசாமி, ஜெயச்சந்திரன் கனகராஜ், பிரான்சிஸ் மற்றும் தேவராஜா ஆகியோர் மீதே இந்த ஆட்கடத்தல் குற்றச் சாட்டு சுமத்தப்பட்டிருந்ததாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஓசியன் லேடி கப்பலின் மூலம் 72 பேரை கனடாவிற்கு சட்டவிரோதமான முறையில அழைத்துச் சென்றதாக இவர்கள் மீது

19 ஆம் பக்கம் பார்க்க

## சபாநாயகர் உத்தரவிட்டும் பொலிஸ் பாதுகாப்பு இல்லை

### கவலை கொள்கிறார் சிறிதரன் எம்.பி.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் எனது அலுவலகத்திற்கு தொடர்ந்து பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பிரதிப் பொலிஸ்மா அதிபரை நாடாளுமன்றத்திற்கு அழைத்து பணிப்புரை விடுத்தும் இதுவரை பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்று யாழ். மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகியோரும் நானும் கடந்த 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சபாநாயகரைச் சந்தித்து எனது அலுவலக பாதுகாப்பு நீக்கப்பட்டமை குறித்து முறையிட்டோம். அவர் உடனடியாக பிரதிப் பொலிஸ்மா அதிபரை அழைத்து உடனடியாகப் பாதுகாப்பு வழங்கும்படி

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசின் செயற்பாடுகள் மூலம் இலங்கை தனிமைப்படும் அபாயம்

### எச்சரிக்கிறார் மங்கள எம்.பி.

(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடுகள் மூலம் சர்வதேச சட்டங்கள் மீறப்படுவதாகவும் இதனாலேயே சர்வதேச தலையீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், உலக நாடுகள இலங்கையைத் தனிமைப்படுத்தக் கூடிய அபாயம் நிலவிவருவதாகவும் ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் மீளவும் ஜனநாயகத்தை

19 ஆம் பக்கம் பார்க்க

# மன்னாரில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் திட்டமிட்டு பின் தள்ளப்படும் நிலை

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் திட்டமிட்டு மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளரினால் பின் தள்ளி வைக்கப்பட்டு வருவதாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வருடா வருடம் தரம் -1 இற்கு மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற போது அந்த மாணவர்களை தரம் -1 இற்கு பொறுப்பான ஆசிரியர்களே வரவேற்பது வழமை. இந்த நிலையில் இவ்வருடம் மன்னார் வங்காலை புனித ஆனால் ம.வி பாடசாலையில் தரம் -1 இற்கான ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

கடந்த 18 ஆம் திகதி இடம்பெறவிருந்த தரம் -1 மாணவர்களை பாடசாலையில் அனுமதிக்கும் கால்கோள் விழா இதுவரை இடம்பெறவில்லை என பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது வரை வங்காலை புனித ஆனால் ம.வி பாடசாலையில் தரம்-01 இற்கு சேர்ப்பதற்காக 95 மாணவர்கள் பாடசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை மூன்று பிரிவுகளில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.எனினும் மன்னார் வலயக்கல்வித்திணைக்களம் இதுவரை ஆசிரியர்கள் எவரையும் நியமிக்கவில்லை.

இது தொடர்பாக வங்காலை கிராம மக்கள் மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எம்.சியாவின் கவனத்திற்குக் கொண்டு சென்ற போதும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை எனவும்,ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பில் தொடர்ந்தும் அசமந்தப்போக்குடன் அவர் செயற்படுவதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

உடனடியாக ஆசிரியர்கள் நியமிக்கப்படாத நிலையில் மன்னார் வலயக்கல்விப்பணிமனைக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர். இதேவேளை தமிழ்ப்பாடசாலைகளான பேசாலை புனித.மரியாள் பாடசாலையில் இவ்வருடம் தரம்-1 இற்கு சுமார் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள போதும் மூன்று பிரிவுகளுக்கும் இது வரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இதே வேளை தாழ்வுபாடு புனித வளனார் ம.வி பாடசாலையில் நீண்ட காலமாக ஆரம்பப்பிரிவுகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் எவ்வித பிரச்சினைகளும் இல்லாத நிலையில் மன்னார் கல்வி வலயம் இயங்கி வந்த போதும் கடந்த ஒரு வருடகாலமாக மன்னார் கல்வி வலயத்திற்குற்பட்ட பாடசாலைகளில் பல்வேறு பிரச்சினைகள் இடம்பெற்று வருவதாகவும்,குறிப்பாக தமிழ்ப் பாடசாலைகள் வலயக்கல்விப்பணிப்பாளரினால் திட்டமிட்டு பின் தள்ளிவைக்கப்பட்டு வருவதாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

# அடிப்படை வசதிகளின்றி வடமராட்சி கிழக்கு மக்கள்



வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலத்தில் நடைபெற்ற யுத்த சூழல் காரணமாக கடந்த 2000 ஆம் ஆண்டு அப்பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் 11 வருடங்களுக்குப் பின்னர் அப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் 75 இற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றபோதும் அப்பகுதிக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், வீட்டுவசதிகள் எதுவும் அற்ற நிலையில் தாங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் வாழும் 75 குடும்பங்களும் ஒரு இடத்திலேயே குடிநீர்பெற்று வருவதாகவும் வறட்சியான காலங்களில் குடிநீர் பெறுவதில் பெரும் சிரமங்களை தாங்கள் எதிர்நோக்கி வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தங்கள் தேவைகளை பெறுவதற்கு வேறுபிரதேசங்களுக்குச் செல்லவேண்டும் என்றால் 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பருத்தித்துறை மருதங்கேணி வீதிக்கு நடந்து சென்றே போக்குவரத்துச் செய்யவேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (02)

# கடற்தொழில் அபிவிருத்தி 'பாசிக்' நிறுவனம் கடனுதவி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு பாசிக் நிறுவனத்தினால் 2 கோடியே 20 இலட்சம் ரூபா சுழற்சி முறைக் கடனாக வழங்கப்பட்டது.

இக் கடனில் பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து 15 இலட்சம் ரூபா, தெரிவு செய்யப்பட்ட 31 அங்கத்தவர்களுக்கு ரூபா 50 ஆயிரம் வீதம் கடனாக வழங்கப்பட்டது.

இக்கடன் வழங்கும் நிகழ்வு கடந்த 22ஆம் திகதி சங்க தலைவர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளரும், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி உத்தியோகத்தர்களும் கூட்டுறவுச் சங்கத்திற்கு கடன்வழங்கிய பாசிக் நிறுவனத்தின் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வழங்கப்பட்ட நிதியிலிருந்து ஏற்கனவே இலங்கை வங்கியில் கடன் எடுத்து இதுவரை கடனை செலுத்தாத பயனாளிகளான 6 பேரிடமிருந்து அவர்கள் கட்டவேண்டிய பணத்தை எடுத்து இலங்கை வங்கியிடம் கட்டிவிட்டு மிகுதிப் பணமே அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அத்துடன் 50 ஆயிரம் ரூபா கடன் வழங்குவதாக இருந்தும் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசம் சங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய 3 இலட்சம் ரூபாவை கொடுக்காமையினால் எல்லாப் பயனாளிகளுக்கும் சமமாக 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. மிகுதி 10ஆயிரம் ரூபா சமாசம் சங்கத்திற்கு வழங்கியவுடன் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (38)

# வட்டார எல்லைகள் மீளாய்வு செயலகத்தில் கலந்துரையாடல்



யாழ்.மாவட்டத்தில் வட்டார எல்லைகளை மீளமைத்தல் தொடர்பிலான கலந்துரையாடல் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

மாவட்ட செயலகத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது வட்டார எல்லைகளை மீளமைத்தல் தொடர்பில் கடைப்பிடிக்க வேண்டிய மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பிலான விளக்கவுரையினை ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா விளக்கினார்.

இதனிடையே யாழ்.மாவட்டத்தில் தற்போது இயங்கிவரும் நலன்புரி நிலையங்கள் மற்றும் அவற்றின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும், துறைசார்ந்தோரிடம் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், பருத்தித்துறை ஆகிய பகுதியில் இயங்கிவரும் 24 நலன்புரி முகாம்களில் தற்போது வாழும் ஆயிரத்து நூற்றி 45 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இதனிடையே குறிப்பிட்ட நலன்புரி முகாம்களில் வாழும் மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்யும் முகமாக அமைச்சர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதிமூலம் இம் மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் நிறைவுசெய்யப்படவுள்ளன.

அத்துடன் நலன்புரி முகாம்களின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் தாம் குறித்த பகுதிகளுக்கு அடுத்தமாதம் நேரடியாக விஜயம் மேற்கொண்டு ஆராயவுள்ளதாகவும், ஏனைய தேவைகள், கோரிக்கைகள் தொடர்பாகவும் அமைச்சர் இதன்போது கவனம் செலுத்தினார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா ஆகியோர் உடனிருந்தனர்

# கல்வி மேம்பாட்டிற்காக வேள்ட்விசன் உதவி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கில் வேள்ட்விசன் நிறுவனத்தின் கல்வி மேம்பாட்டுக்கான செயற்திட்டங்கள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கான முன்ஆயத்தங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி நிறுவனமும் வலி. மேற்கு பிரதேச செயலகமும் இணைந்து மேற்படி நடவடிக்கையில் இறங்கியுள்ளன.


இதற்காக கிராமங்கள் தோறும் தரவு சேகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றது. மாணவர்களின் கல்வி மேம்பாட்டை அடிப்படையாக வைத்து மேற்படி செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

# நூலகமின்றி மக்கள் அவதி

வாசிப்பு உயிர்துடிப்பு மிக்க சமூகத்தின் அடி நாளமாகும். அந்த அடிப்படையில் யுத்தத்தின் பின் தமது கிராமங்களில் மீளக்குடியமர்ந்து தற்போது முசலிப் பிரதேசத்தில் வசித்து வரும் மக்கள் தமது பகுதியில் நூலகமில்லை என அங்கலாய்க்கின்றனர்.

முசலிப் பிரதேசத்தின் சிலாவத்துறை, பண்டாரவளி,அகத்திமுறிப்பு,

மேத்தன்வளி,வேப்பங்குளம், புனச்சி,பொற்கேணி, புதுவெளி, இலந் தைக்குளம்,தம்பட்டமுசலிகட்டு,மருதமடு, கரடிக்குளி, மருச்சிக்கட்டி, முசலி, கூளாங்குளம் போன்ற கிராமங்கத்தில் வசித்து வருபவர்களே நூலகமின்றி இருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.



யாழ். நகர் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள செலான் வங்கியின் 11 வருட சேவை நிறைவை ஒட்டி அந்தக்கிளை நவீன முறையில் புனரமைக்கப்பட்டு தனது சேவையை நேற்று முற்பகல் ஆரம்பித்தது. இந்நிகழ்வில் மதத்தலைவர்கள், வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டிருப்பதையும் வாடிக்கையாளர் ஒருவரது பிள்ளைக்கு பரிசில் வழங்கப்படுவதையும் காணலாம். (படம்:- பார்த்தீபன்)

# வடக்கில் சமூக ஐக்கியத்தை உருவாக்கும் உன்னத முயற்சி

## இளைஞர் சேவைமன்றப் பிரதிப் பணிப்பாளர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் அஷதிய்யா சம்மேளனத்தினால் முகம்மது நபியின் பிறந்த தினத்தை முன்னிட்டு நடந்த இவ்விழா சமூக ஐக்கியத்தை நிலைநாட்டக்கூடியதும், எமக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை அகற்றவும் வழி வகுத்துள்ளது என யாழ்.இளைஞர் சேவைகள் மன்ற பிரதிப் பணிப்பாளரான பா.ஈஸ்வரராசா தெரிவித்தார்.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் யாழ். அஷதிய்யா சம்மேளனமும் பிளவ்ஸ் ஹாஜியார் பௌண்டேசனும் இணைந்து நடத்திய முஹாரம் பரிசளிப்பு விழாவும் ஊடகவியலாளர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாரக் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் முஸ்லிம் மக்களின் நீண்டகால உறவு ஐக்கியம் ஒருமைப்பாட்டை நிலை நாட்டக் கூடியதாக இவ்விழா அமைந்துள்ளது. அத்துடன் மாணவர்களுக்கான பரிசளிப்புடன், ஊடக வியலாளர்கள் கௌரவிபபும் போற்றத்தக்க செயலாகும். கடந்த காலங்களில் வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒருவரோடு ஒருவராக சகல துறைகளிலும் பின்னிப் பிணைந்து வாழ்ந்து வந்தவர்கள், சமய கலாசார விழுமியங்களில் ஒற்றுமையுடன் இணைந்து வாழ்ந்து வந்தவர்கள் எனத் தெரிவித்தார்.

இவரைத் தொடர்ந்து அதிபர் முபாரக் உரையாற்றுகையில்,

இவ் விழாவில் முக்கிய அம்சம் ஊடகவியலாளர் கௌரவிப்பாகும். ஏனெனில், ஊடகம் அதி சக்தி வாய்ந்தது. அதனை முஸ்லிம் மக்கள் திறம்பட பிரயோசனப்படுத்துவதில்லை. எனவே எம் மக்களுக்கு ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் முஸ்லிம் மக்களுடன் உறவை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இளம் ஊடகவியலாளர்களுக்கும் ஊக்கம் கொடுக்கும் முகமாகவே கௌரவிக்கப்படுகின்றனர்.

அதுமட்டுமல்ல, பௌண்டேஷனின் தலைவர் உடகத்துறையைச் சேர்ந்தவர். அவர் மனதில் ஏற்பட்ட உணர்வே இக்கௌரவிப்புக்கு முக்கிய காரணமாகும் எனக் கூறினார். இந்நிகழ்வில் யாழ் மாநகர உதவிமேயர் எம்.எம் ரமீஸ், திரைப்பட இயக்குநர் கேசவராஜா, யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜிப்றி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (105)

# கற்சிலைமடு கிராம மக்களில் 150 பேருக்கு இந்திய வீட்டுத்திட்டம்

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமமான கற்சிலைமடு கிராமத்தில் மீளக் குடியேறிய மக்களில் 3 அங்கத்தவருக்கும் கூடிய குடும்ப உறுப்பினர்களினைக் கொண்டுள்ள குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 150 வீடுகளுக்கான அனுமதி கிடைக்கப்பெற்று பயனாளிகள் தமது வீட்டுத் திட்டங்களினை ஆரம்பித்துள்ளனர்.

இவ் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான முதற்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு 150 குடும்பங்களும் தமது வீட்டின் அத்திவாரத்தினைக் கட்டி முடித்ததைத் தொடர்ந்து தலா 1 இலட்சம் வீதம் பணம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து கட்டடத்தினைக் கட்டி முடிப்பதற்கான கற்களினை அரிந்து கட்டடத்தின் ஒரு பகுதியினைக் கட்டி முடித்தவருக்கான அடுத்த கட்டக் கொடுப்பனவுகளினை வழங்குவதற்குப் பிரதேச செயலக பொறியியலாளர் கட்டடங்களைப் பார்வையிட்டு அடுத்த கட்டக் கொடுப்பனவுக்கான சிபார்சுகளை மேற்கொண்டு வருகின்றனர். (42)

# "கைகொடுக்கும் நண்பர்கள்" அமைப்பு யாழ். நகரில் நேற்று உதயம்



(யாழ்ப்பாணம்)

நம்பிக்கையீனமா? மனத்தள்வா? தற்கொலை எண்ணமா? போன்ற உளவியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்பு ரீதியாக உதவும் "கைகொடுக்கும் நண்பர்கள்'' அமைப்பின் யாழ். மாவட்டக் காரியாலயம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ். நான்காம் குறுக்குத் தெருவில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழ மருத்துவ பீடாதிபதி எஸ்.பால குமார் இந்த அலுவலகத்தின் பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து வைத்ததுடன் அலுவலகத்தின் நாடாவையும் வெட்டித் திறந்து வைத்துள்ளார்.

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட இந்த அமைப்பின் உறுப்பினர் சத்தியா மற்றும் தொண்டர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் இவ்வாறு உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ் அமைப்பு இன்று முதல் வருடத்தின் எல்லா நாட்களிலும் மதியம் 12.30 மணிமுதல் பிற்பகல் சேவைக்காக 4.30 மணிவரை திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்கொலை மரணங்கள் மற்றும் உளவியல் பிரச்சினைகள் அதிகரித்திருக்கும் சூழலில் இந்த அமைப்பின் சேவை முக்கியமாக கருதப்படுகின்றது. (பா)

# பூசை வழிபாடுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புதுக்குடியிருப்பு - ஆனந்தபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இவ் ஆலயத்தில் பாலஸ்தானம் செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்று வருவதாகவும், இவ் ஆலயம் இன்னமும் மீள் புனரமைப்பு செய்யப்படாது காட்சியளிப்பதாகவும் கூறப்படுகிறது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கிருஷ்ணர் ஆலயம் இதுவே ஒன்றெனவும், போருக்கு முன்னய காலங்களில் அலங்கார உற்சவங்கள், நித்திய பூசைகள் நடைபெற்ற இடமெனவும் இன்று இவ் ஆலயம் பாழடைந்த நிலையில் பாலஸ்தானம் செய்யப்பட்டு, பூசை நடைபெற்று வருவதாகவும் ஆலய சூழலில் உள்ள மக்கள் கவலையுடன் தெரிவிப்பதாகவும் அறியமுடிகிறது. (138)

# கடமை பொறுப்பேற்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக கடமையாற்றிய த.ஈசன், திருமதி கயல்விழி உதயசங்கர் ஆகியோர் தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல அலுவலர்களாக மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டு வரணி ஆசிரியர் மத்திய வள நிலையத்தில் கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர். (11)

# அக்கறாரா காப்புறுதித் திட்டம் கணனிமயப்படுத்த ஏற்பாடு

இலங்கை அரச திணைக்களங்களிலும், பாடசாலைகளிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் அக்கறாரா காப்புறுதித் திட்டத்தினை கணனி முறையில் ஒழுங்குபடுத்திச் சீராக வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக காப்புறுதித் திட்டப் பயனாளிகள் யாவருக்கும் கணனி மயப்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இவ் விண்ணப்பப்படிவங்களில் இரண்டு பிரதி வீதம் உடன் ஆங்கிலத்தில் பூரணப்படுத்தி அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

இவ் விண்ணப்பத்துடன் 2 பாஸ்போட்டளவு புகைப்படங்கள், அடையாள அட்டைப் பிரதி, முதல் நியமனக் கடிதப் பிரதி, பிறப்பு சான்றிதழ் பிரதி, திருமணமானவர்களின் திருமணப் பதிவு சான்றிதழ் பிரதி, 18 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் திருமணமாகாத பிள்ளைகளின் பிறப்பு சான்றிதழ் மற்றும் வயதான பெற்றோரின் பிறப்பு சான்றிதழ் பிரதி என்பவற்றினையும் இணைத்து அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. (42)

## முள்ளியான் கிராமத்தில் வைத்தியசாலை திறப்பு

வடமராட்சி கிழக்கு முள்ளியான் கிராமத்தில் வைத்தியசாலை நேற்று வைத்திய கலாநிதி உமாசிவனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வல் முள்ளியான் கிராம மட்டப் பொது அமைப்புக்கள், சுகாதார திணைக்களத்தைச் சேர்நத சுகாதார தொண்டர்கள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

முன்னர் இக்கிராமத்தில் வைத்தியசாலை இல்லாமையால் இக்கிராம மக்கள் சிகிச்சை பெறுவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் தற்போது இவ்வைத்தியசாலை திறக்கப்பட்டமையால் மக்கள் பெரும் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

# புதுக்குடியிருப்பு - கைவேலி வீதி புனரமைப்புபணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புதுக்குடியிருப்பு - கைவேலி வரையான பரந்தன் வீதியில் தற்போது புனரமைப்பு வேலைகள் மீளவும் தொடங்கியுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த சில நாட்களாகப் பெய்த மழையினால் இடைநிறுத்தப்பட்டிருந்த இவ்வேலைகள் தற்போது தொடங்கியுள்ளதோடு, புதுக்குடியிருப்பு முத்துமாரி அம்மன் கோவில் வரையான வீதி புனரமைக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, இந்தப் புனரமைப்பு வேலைகள் மிகவும் மந்த கதியில் மேற்கொள்ளப்படுவதால் பயணிகளும், வாகனங்களும் போக்குவரவு செய்வதில் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவிப்பதைக் காணக்கூடியதாகவும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (138)

# நபிகள் பிறந்த தினத்தை முன்னிட்டு பள்ளிவாசல்களில் விசேட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

முகம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். முஸ்லிம் பகுதியில் பல்வேறு நிகழ்வுகள் வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று தினங்களும் நடைபெற்றுள்ளன.

மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசலில் விருந்துபசாரமும், யாழ். ஜின்னா மைதானத்தில் உதைபந்தாட்டம், கயிறு இழுத்தல், கிறிஸ்கம்பம் ஏறுதல் போன்றவையுடன் மரதன் ஓட்டப் போட்டிகளும் இடம்பெற்றன.

இறுதி நாளான நேற்று ஞாயிறு மாலையில் உலமாக்களின் பயான் நிகழ்வும், பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன. யாழ். முஸ்லிம் உதவும் கரங்கள் அமைப்பினால் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நபி (ஸல்) பிறந்ததினத்தை சொந்த மண்ணில் கொண்டாடுவதற்காக நீர்கொழும்பு, கொழும்பு மற்றும் பிறமாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருபவர்களில் ஏராளமானவர்கள் வருகை தந்துள்ளார்கள். (105)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நாய்களை விலத்தி ஓடுதல்!

வாழ்க்கை எப்படிப் போகுது என்று கேட்டால் பலர் "நாய் படாப் பாடுதான்" என்று சொல்வதைக் கேட்கிறோம். அதென்ன நாய் படும் பாடு என்றறிய ஜாக் லண்டனின் 'கானகத்தின் குரல்' அல்லது ஜெயகாந்தனின் 'கேவலம் ஒரு நாய்' அல்லது வண்ணநிலவனின் 'மிருகம்' சிறுகதையைப் படித்துப் பார்த்தால் தெரியும்.

அந்தக் கதைகளைப் படித்த எவருக்கும் நாய்களின் மீது அன்பு சுரக்காமல் போகாது. இந்த அன்பே அபரிமிதமாகி, நாயை "நாய்" என்று சொன்னாலே துடித்துப் போகிறவர்கள் இருக்கிறார்கள். 'செல்லப் பப்பு' என்றோ 'கண்ணா' என்றோ 'ஸ்வீட்டி' என்றோ் கொஞ்சும் காருண்ய உயிரன்பில் திளைப்பார்கள். ஆனால், நகர வாழ்க்கை ஒரு மனிதனை அப்படி "அன்பின் வழியது உயிர்நிலை" என விட்டுவைக்குமா எனச் சொல்ல முடியவில்லை.

வீதிக்கு வீதி குறுக்கும் மறுக்குமாக நடைபழகியபடியும், இரண்டு சக்கர வாகனப் பயணிகளுக்கெல்லாம் பயந்து உடனே எழும்பிவிட முடியாது என்ற அலட்சியத்தோடு படுத்தபடியும் தெருக்களை நிறைத்திருக்கும் இன்றைய தெருநாய்களின் பெருக்கத்தைப் பார்க்கும்போது ஜீவகாருண்ய உணர்வைத் தக்கவைப்பது எவருக்கும் கடினமாகவே இருக்கும்.

வாயில்லா ஜீவன்களின் மீதான எங்கள் கருணையின் விளைவாக தெருநாய்கள் வகைதொகையில்லாமல் விளைந்து விளையாடித் திரிவதைக் காணமுடிகிறது. இவை நம் உடலில் வாய் வைத்தால் உண்டாகும் விளைவை எண்ணினால் இவற்றை வாயில்லா ஜீவன்களென எண்ணிப் பரிதாபப்பட முடியாமல் போகிறது.

நல்ல நாய் எது வெறிநோய் பிடித்த நாய் எது என்று வித்தியாசம் அறிய முடியாமல் பதற்றத்துடனேயே தெருவில் இவற்றைக் கடந்து செல்ல நேர்கிறது. ஏனெனில் இந்தத் தெருநாய்களுக்கு யாரும் வெறிநோய் ஊசி போட்டிருக்க முடியாது. அவ்வாறு ஊசி போடாத நாய்களுக்கு வெறிநோய்த் தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. அந்த வெறிநோய்த் தொற்று மனிதருக்கு ஏற்பட்டுவிட்டால் அதோகதிதான். எனவே, தெருவில் திரியும் எந்த நாய் கடித்தாலும் உடனடியாக கடி வாங்கியவருக்கு வெறிநோய்த் தடுப்பூசி போட ஓடவேண்டும்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் இதற்கு 23 ஊசிகள் போடப்படும். அதன் பின், 25 ஆண்டுகளுக்கு முன் நாய்க் கடிக்கு தொப்புளைச் சுற்றி 14 ஊசிகள் போடுவார்கள். பின்னர் 10 ஆண்டுகளுக்கு முன் 7 ஊசிகள் போட்டனர். இப்போது 3 ஊசிகள் மட்டும்தான்.

வெறி பிடித்த நாயின் கடி எச்சில் மூலம் வருவதுதான் வெறிநோய் (Rabies). வெறி நோயினால், அளவுக்கதிகமான மூளை வீக்கம் ஏற்படும். பின்னர் மூளையின் செயல்பாடுகளை மாற்றியமைத்து கண்டபடி வைரஸின் போக்கில் செயல்பட வைக்கும். நமது இயல்பு நிலை பறி போய்விடும்.

இந்த நாய்களைக் கொல்ல நம் காருண்ய உணர்வு விடாவிட்டால், அவற்றுக்கு கருத்தடைச் சிகிச்சையையாவது செய்துவிட வேண்டும். அதேசமயம், நடைபாதை உணவகங்களை சுத்தத்திற்கு நெறிப்படுத்தியும், உணவுக் கழிவுகள் தெருவில் கொட்டப்படாமல் பார்ப்பதன் மூலமும் தெருநாய்ப் பெருக்கத்தை ஓரளவு குறைக்கலாம்; குறைக்க வேண்டும்.

பிராணிகளைத் துன்புறுத்துவது தவறுதான். ஆனால், கட்டுப்பாடற்ற தெருநாய்ப் பெருக்கத்திற்குத் தீர்வுகாண வேண்டும். இல்லையென்றால், ஒவ்வொரு தெருவிலும் யாரோ ஒருவர் கல்லைப் பொறுக்கியபடி "மிருகம்" ஆகிக்கொண்டிருக்கும் படிதான் நேரும்.

- ஆசிரியர்

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை கோத்தாவின் பேச்சு பொய்யாக்கி விட்டது

## சம்பந்தன்

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை பாதுகாப்புச் செயலரின் கருத்துக்கள் பொய்யாக்கி விட்டதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

காணாமல் போனவர்களென்று எவரும் இல்லையென பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்துள்ளார். கைதானவர்கள், சரணடைந்தவர்கள் பெருமளவானோர் காணாமல் போயுள்ளனர். இந்த நிலையில் அரசாங்கத்தின் முக்கிய அதிகாரியொருவர் இவ்வாறு கருத்துக் கூறுவதை என்னவென்று சொல்வது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனவர்கள் என்று எவரும் இல்லை. இவ்விடயம் தொடர்பில் சர்வதேசத்தினால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது குறித்து கருத்துக் கேட்டபோதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் ஆணைக் குழு ஒன்றினை நியமித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக குழுவே பரிந்துரை செயதுள்ளது.

இந்தநிலையில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட குழுவொன்றின் விசாரணை அறிக்கையினை வைத்துக் கொண்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், பொறுப்பு வாய்ந்த அதிகாரியுமான கோத்தாபய ராஜபக்ஷ கருத்துக் கூறுவது தவறானதாகும்.

ஆணைக் குழுவினை அமைத்து காணாமல் போனோரது மனைவிமார், பெற்றோர், உறவினர்களென பலதரப்பட்டவர்களிடமும் விசாரணைகளை மேற்கொண்டு ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

மனைவி மற்றும் பிள்ளைகளின் கண்முன்னாலேயே கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது?

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளையே நடைமுறைப்படுத்தாத அரசாங்கம் இவ்வாறு கருத்து கூறுவதை என்னவென்று சொல்ல முடியும். தாம் எதனையும் கூறலாம் என்ற நிலையே இங்கு காணப்படுகின்றது. காணாமல் போனோர் விவகாரத்தில் பிரதான காரணியாக இராணுவத்தினரே உள்ளனர்.

இந்தநிலையில் இராணுவக் குழுவொன்றின் அறிக்கையினை வைத்துக்கொண்டு இலங்கையில் காணாமல் போனவர்கள் என்று எவரும் இல்லையென பொறுப்பு வாய்ந்த அதிகாரியான கோத்தாபய ராஜபக்ஷ கூறுவது தவறான கருத்தாகும். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார் இரா.சம்பந்தன்.

# ஆடை ஏற்றுமதியில் சரிவு; பொருளாதாரத்திற்குப் பேரிடி

(கொழும்பு)

ஆடை ஏற்றுமதிக்கான சந்தையை சீனாவில் விரிவுபடுத்திய போதிலும் கூட, தொடர்ந்தும் இலங்கை ஆடை ஏற்றுமதியானது வீழ்ச்சியடைந்துள்ளதாக வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கையின் இவ்வாண்டு ஆடை ஏற்றுமதியானது கடந்த ஆண்டை விட வீழ்ச்சியடைந்துள்ளது என இலங்கை ஆடை ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் யோகன் லோறன்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஆடை ஏற்றுமதியானது நவம்பர் 2012 வரை ஏழு சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன எனவும் யோகன் லோறன்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் ஆடை ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள் தொடர்பாக இவரிடம் வினவியபோது ஆடை ஏற்றுமதிகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான புதிய சந்தை வாய்ப்புக்களை நாம் ஆராய்ந்து வருகிறோம். ஆனால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்று மிகப் பெரிய சந்தை வாய்ப்பைக் கண்டறிவதென்பது மிகக் கடினமான பணியாகும் என் யோகன் லோறன்ஸ் பதிலளித்துள்ளார்.

எது எவ்வாறிருப்பினும், ஏனைய நாடுகளின் உயர் உற்பத்தி செலவீனத்தால் நாம் சீனாவிடமிருந்து சில ஆடை ஏற்றுமதிக்கான கட்டளைகளைப் பெற்றிருந்தபோதும் அவை அவ்வளவு பெரிய சந்தை வாய்ப்புக்கள் அல்ல எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாகிஸ்தானுக்கான ஆடை ஏற்றுமதி தொடர்பாக யோகன் லோறன்ஸ் தெரிவித்ததாவது, பாகிஸ்தானிடமிருந்து நாங்கள் ஆடை ஏற்றுமதிக்கான எதுவித கட்டளைகளையும் பெற்று கொள்ளவில்லை.

பாகிஸ்தான் பெருமளவில் டெனிம் ஆடைகள் மற்றும் காலுறைகளையே அதிகம் ஏற்றுமதி செய்கின்றது. ஆனால் இவை இலங்கையில் உற்பத்தி செய்யப்படவில்லை எனவும் அவர் பதிலளித்தார்.

# மிகுதிப்பணத்தை அபகரிக்கும் தனியார் பேருந்து நடத்துநர்கள்

## தினசரி அரங்கேறும் மோசடி

(யாழ்ப்பாணம்)

தனியார் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கான மிகுதிப்பணத்தை அதன் நடத்துநர்கள் திருப்பிக் கொடுப்பதற்கு முன்வருவதில்லை என அப்பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளாலும், பார்வையாளர்களாலும் சுட்டிக் காட்டப்படுகிறது.

தனியார் பேருந்துகளில் கடமையாற்றும் சில நடத்துநர்கள் காலை, மாலை வேளைகளில் பேருந்துனுள் ஏற்படும் சன நெருக்கத்தைப் பயன்படுத்தி, பயணிகளுக்கான மிகுதிப் பணத்தை கொடுப்பதில்லை என பெரும்பாலான பயணிகள் தங்கள் விசனத்தைத் தெரிவித்துக். கொள்கின்றனர்.

நடத்துநர்களின் கைகளில் சில்லறைக் குற்றிகள் இருக்கின்றபோதிலும், சில்லறை இல் லாத ஒரு தோற்றப்பாட்டை உண்டாக்கி பயணிகளுக்கான மிகுதிப்பணத்தை அபகரிப்பது எந்த வகையில் நியாயமாகும் என பாதிக்கப்பட்ட பயணி ஒருவர் வேதனையுடன் தெரிவித் துக் கொண்டார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

யாழ்.நகரிலிருந்து நேற்று முன்தினம் மாலை மாதகலுக்குப் புறப்பட்டுச் சென்ற தனியார் பேருந்து நடத்துநர் ஒருவர் ஆனைக்கோட்டையில் இறங்கிய பெண்ணொருவருக்கு மிகுதிப்பணம் பத்து ரூபாய் இல்லையெனக் கூறி இறக்கி விட்டுள்ளார். இதேபோன்று மறுநாளும் இதே பாதையூடாகச் செல்லும் பேருந்து ஒன்றில் அப்பெண்ணுக்கு இச்சம்பவம் நேர்ந்துள்ளது. இரண்டு நாட்களில் மிகுதிப்பணம் கிடைக்காத நிலையில், இவ்விடயத்தை அப்பெண் பலரிடமும் எடுத்துக் கூறி வருவதோடு, சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து நடவடிக்கை எடுப்பார்களா? எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (138)

# பிரதேச சபைகளுக்கு உருளை இயந்திரங்கள்

தீவகப் பகுதிகளில் வீதிப்புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென வடமாகாண சபையினால் 17 மில்லியன் ரூபா பெறுமதியான ரோலர் உருளை இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கும் வேலணைப்பிரதேச சபைக்கும் சேர்த்து ஒரு இயந்திரமும், கடல் கடந்துள்ள நெடுந்தீவு பிரதேச சபைக்கு தனியாக ஒரு இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் இப்பகுதியில் உள்ள உள்ளக வீதிகள் சிரமமின்றி புனரமைக்க ஏதுவாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (175)


# துயர்களில் இருந்து மீட்பு — மிஹாய் சீக்செண்ட்மிஹாயி

■ ஆர்.பிரபு

**மகிழ்ச்சியற்ற நிலை என்பது தன்னிலை தன் இலக்குகளை அடைவதில் ஏற்படும் தடையே. வெற்றிகரமான வியாபாரி ஆக வேண்டும் என்ற இலக்கிற்கு நாட்டின் பொருளாதாரச் சூழல் தடையாகலாம். மகிழ்ச்சியான குடும்ப வாழ்வை ஒரு மரணம் புரட்டிப் போடலாம். இவ்வாறு நிகழும் போது தன்னிலை தன் ஒழுங்கை இழக்கிறது. கலைக்கப்பட்ட தேன்கூட்டின் தேனீக்களாக எண்ணங்கள் அலைந்து, பறந்து துன்பத்தில் ஆழ்த்துகின்றன. அவற்றை எப்படி மறுபடியும் கூட்டுக்குள் அடைப்பது. புறச்சூழல்களை மாற்ற முடியாது. ஆனால் ஒரு–வருடைய அகச் சூழலை மாற்றி அமைக்க முடியும். இதற்கு முதற்படியாக மனம், பிரவாக நிலையை (flow state) அடைய வேண்டும் என்கிறார் மிஹாய் சீக்செண்ட்மிஹாயி. ஒவ்வொருவருமே இந்த நிலையை ஏதாவது ஒரு தருணத்தில் உணர்ந்திருப்போம். ஒரு வேலையில் மூழ்கி இருக்கும் போது நேரம் போவதே தெரியாமல் இருப்பது மற்றும் அந்த வேலையை முடிக்கும் போது வரும் உற்சாகம் போன்றவை.**

ஒருவர் வாழும் காலகட்டமும், அவர் வாழ நேரும் சமுதாய சூழலும் அவருக்கு வாழ்க்கையில் வெற்றி என்பது குறித்த வரையறையை உருவாக்கி அளிக்கின்றன. அந்த வெற்றியை அடைவதிலேயே மகிழ்ச்சி இருப்பதாக கருதப்படுகிறது. இதை நோக்கியே அனைவரும் இயந்திர கதியில் ஓடுகின்றனர். பலருக்கும் இந்த வெற்றியை முழுவதும் அடைய முடிவதில்லை. வாழ்க்கையின் பேரிடர்கள் குறுக்கிடுகின்றன. வெற்றியை அடைய முடிந்த மற்றவர்களுக்கும் ஒரு ஏமாற்றம் மிஞ்சுகிறது. நடுவயது நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். அவர்கள் கற்பித்து கொண்ட இலக்கு மகிழ்ச்சியை அளித்ததா என்று ஐயப்படுகின்றனர்.

இது நிகழும்போது மனிதர்கள் வெவ்வேறு வகையான எதிர்வினையை ஆற்றுகிறார்கள். சிலர் எஞ்சி இருக்கும் தங்கள் வாழ்கையைச் சுற்றித் தடுப்பு அரண்களை அமைத்து, இருப்பதைக் காப்பாற்றிக் கொண்டு, தங்களுக்குள் ஒடுங்கியவர்கள் ஆகிறார்கள். சிலர் மனச் சோர்வினால் பீடிக்கப்பட்டு, அதில் அமிழ்ந்து போகிறார்கள். சிலர் மட்டுமே வாழ்க்கைக்கு வேறு அர்த்தம் கொடுத்து மீண்டு வர முயல்கிறார்கள். அவர்கள் தங்களுக்கான இலக்குகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். அதை நோக்கிய தங்கள் பயணத்தில் நிறைவை தேடுகின்றனர். Flow - The classic work on how to achieve happiness என்ற இந்த புத்தகம், மனித மனதின் மகிழ்ச்சியான நிலை என்ன என்பதையும், அந்த நிலையை ஒருவர் பிரக்ஞையுடன் உருவாக்கிக் கொள்வதையும் ஆராய்கிறது.




மனிதர்கள் தங்கள் துயர்களில் இருந்து மீண்டு வருவதற்கான திறவுகோல் அப்படி உருவாக்கிக் கொள்வதிலேயே இருக்கிறது என்கிறார், இருபது வருடங்களுக்கு மேல் மகிழ்ச்சி குறித்தும் படைப்பாற்றல் குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டு வரும் ஹங்கெரிய-அமெரிக்கரான மனோத்துவ நிபுணர் மிஹாய் சீக்செண்ட்மிஹாயி (Mihaly Csikszentmihalyi)

அனுபவங்கள் என்பவை புலன்கள் வாயிலாக ஒருவருக்கு வந்து சேர்வன. புலன்களால் உள்வாங்கக் கூடிய ஏராளமான நிகழ்வுகள் வெளியே நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் இதில் ஒரு சிலவே மனிதனின் பிரக்ஞையில் நுழைகின்றன. கொட்டிக் கிடக்கும் ஏராளமான அனுபவங்களில் இருந்து சிலவற்றை மட்டுமே பிரக்ஞையில் கொண்டு வந்து சேர்ப்பவை ஒரு மனிதரின் உள்ளார்ந்த இச்சைகளும், அந்த இச்சைகளினால் அவர் உருவாக்கி கொண்ட இலக்குகளும் மட்டுமே. இதனால் தாம் செய்யச் சாத்தியமான பல்வேறு செயல்களில் இருந்து மனிதர்கள் சிலவற்றை மட்டுமே தேர்ந்து எடுக்கின்றனர். இவ்வாறான இலக்குகளும், அனுபவங்களும் சேர்ந்தே ஒருவரது தன்னிலையை உருவாக்குகின்றன.

மகிழ்ச்சியற்ற நிலை என்பது இந்தத் தன்னிலை தன் இலக்குகளை அடைவதில் ஏற்படும் தடையே. வெற்றிகரமான வியாபாரி ஆக வேண்டும் என்ற இலக்கிற்கு நாட்டின் பொருளாதாரச் சூழல் தடையாகலாம். மகிழ்ச்சியான குடும்ப வாழ்வை ஒரு மரணம் புரட்டிப் போடலாம். இவ்வாறு நிகழும் போது தன்னிலை தன் ஒழுங்கை இழக்கிறது. கலைக்கப்பட்ட தேன்கூட்டின் தேனீக்களாக எண்ணங்கள் அலைந்து, பறந்து துன்பத்தில் ஆழ்த்துகின்றன. அவற்றை எப்படி மறுபடியும் கூட்டுக்குள் அடைப்பது. புறச்சூழல்களை மாற்ற முடியாது. ஆனால் ஒருவருடைய அகச் சூழலை மாற்றி அமைக்க முடியும். தன்னிலையை வேறு இலக்குகளைக் கொண்டு மாற்றிக் கட்ட முடியும். இதற்கு முதற்படியாக மனம் தான் அடையச் சாத்தியமான ஆகச்சிறந்த நிலையாகிய பிரவாக நிலையைக் (flow state) கண்டு கொண்டு, அதை வலிந்து உருவாக்குவதற்கான முயற்சியில் தொடங்க வேண்டும் என்கிறார் மிஹாய் சீக்செண்ட்மிஹாயி.

இந்தப்பிரவாக நிலை என்பது என்ன? இது ஒரு செயலை முழுக்கவனத்துடன் வேறு சிந்தனைகளே இல்லாது செய்யும்போது உருவாகக் கூடிய ஒரு ஆனந்த நிலை. ஒவ்வொருவருமே இந்த நிலையை ஏதாவது ஒரு தருணத்தில் உணர்ந்திருப்போம். ஒரு வேலையில் மூழ்கி இருக்கும் போது நேரம் போவதே தெரியாமல் இருப்பது மற்றும் அந்த வேலையை முடிக்கும் போது வரும் உற்சாகம் போன்றவை. கலைஞர்கள், ஓவியர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், மலையேறிகள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்கள் இந்த நிலையை அதிகமும் அடைகின்றனர் என்கிறார் மிஹாய். மகிழ்ச்சியை உருவாக்கும் இந்தச் செயல்களை, வெறும் இன்ப நாட்டத்தினைக் கருத்தில் கொண்டு செய்யும் செயல்களில் இருந்து பிரித்துப் பார்த்தல் அவசியம். நாளெல்லாம் தொலைக்காட்சி முன் அமர்ந்து பொழுதைப் போக்கும் ஒருவர் ஒரு மேலோட்டமான இன்ப நிலையில் இருக்கிறார். ஆனால் ஒரு போதும் அவர் செயற்பிரவாகத்தின் ஆனந்த நிலையை அடைவதில்லை எனும் மிஹாய் இந்த நிலை குறித்த கீழ்க் கண்ட வரையறைகளை முன் வைக்கிறார்.




**1) திறனும் சவால்களும் சந்தித்தல்**

இங்கு திறன் என்பது உடம்பால் செய்யப்படும் உழைப்பை மட்டும் குறிப்பது இல்லை. ஒரு புத்தகத்தைப் படிப்பதும், ஓவியத்தை ரசிப்பதும் கூட திறனையும் உழைப்பையும் கோருகின்ற செயல்களே. செயல் அளிக்கும் சவால், திறனின்அளவை பொறுத்து அமைதல் அவசியம். இரு சமமான ஆட்டக்காரர்கள் ஆடும் போதே ஒரு டென்னிஸ் ஆட்டம் மகிழ்ச்சியை தர முடியும்.

**2) முழு உளசக்தியையும் கோரி நிற்றல்**

செயலும் செய்பவனும் ஒன்றாகும் நிலையிலேயே பிரவாக நிலை சாத்தியமாகிறது. இந்த நிலையை அடைய ஒருவரது முழு உளசக்தியும் அதில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். செயலின் போது ஏற்படும் கவன சிதறல்கள் இதை சிதறடிக்கின்றன. ஒட்டுமொத்தத் தன்னிலையும் செயல்களில் ஈர்க்கப்பட்டிருக்கும் போது கவலைக்கான இடம் இருப்பதில்லை.

**3) தெளிவான இலக்குகளும் பின்னூட்டுகளும்**

செயல்களுக்குத் தெளிவான இலக்குகள் அவசியம். வெற்றியும் தோல்வியும் தெளிவாக வரையறை செய்யப்படுவது தேவை. ஆனால் இலக்குகள் எளிதாக இல்லாமல் சவாலை அளிக்க வேண்டும். ஒருவர் நாள் முழுதும் மெத்தையில் படுத்திருப்பேன் என்ற இலக்கை வைத்துக் கொள்வதில் எந்தப் பொருளும் இல்லை. அது எந்த வகையான சவாலையும் அளிப்பது இல்லை. சில செயல்களில் இலக்குகள் தெளிவில்லாமல் இருக்கும். உதாரணமாக ஒரு பாடலாசிரியர் என்ன பாடலை எழுத வேண்டும் என்ற இலக்கை வைத்துக் கொண்டு செயல்படுவதில்லை. ஆனால் எழுதி முடித்ததும் அது அவர் நினைத்ததுதானா என்று அவரால் சொல்ல முடியும். அந்த செயலின் வெற்றி தோல்வியை அவரால் உணர முடியும்.

**4) தன்னிலை மறத்தல்**

மகிழ்ச்சி அளிக்கும் செயல்களில் தன்னிலை மறக்கப்படுகிறது. செயலாக மாறி நிற்கும் ஒருவரின் மனது தன்னை மறந்து செயல் தரும் இன்பத்தில் திளைக்கிறது. இந்த அனுபவத்தை அடைய அந்த செயல் மனதிற்குகந்ததாக இருத்தல் அவசியம். பிரவாக நிலையில் இருந்து மீண்டு வருபவர் ஒரு பொழுதும் பழையவராக மீளுவதில்லை. அவரது தன்னிலை மேலும் செறிவாக, ஒருங்கிணைந்து, மேம்பட்ட திறன்களுடன் மீளுகிறார்.

**5) கால பிரக்ஞையில் மாற்றம்**

இரவு பகல் சுழற்சியின் ஒழுங்கே காலமாக அளக்கப்படுகிறது. பிரவாக நிலையில் இருப்பவர்களுக்குக் காலம் வேறு கதியில் இயங்குகிறது. பல மணி நேரங்கள் சில நிமிடங்களாக தோன்றலாம். சில கணங்கள் பல மணி நேரமாகத் தோன்றலாம்.

பிரவாக நிலையின் பல கூறுகளை விளக்கும் மிஹாய் ஒருவர் வாழ்க்கையின் முறிந்த கணங்களில் இருந்து வெளி வருவதற்கு இந்த நிலையை முயன்று அடைவதற்கான பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்கிறார். இது பல்வேறு செயல்களில் அடையப் பெறலாம். விளையாட்டு, சிந்தனை, மேலான உறவு-கள், கலைகள், வேலை என்று பல செயல்கள் இந்த நிலையை அளிக்கக் கூடியன. மேற்சொன்ன ஒவ்வொன்றிலும் பிரவாக நிலையை அடைவது எப்படி என்று எடுத்து காட்டுகளுடன் கூடிய விளக்கங்கள் புத்தகம் எங்கும் விரவி இருக்கின்றன.

(17ஆம் பக்கம் பார்க்க)





கலாபொல - 2013 (கலைச் சந்தை) ஓவியக் கண்காட்சி கொழும்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது. இந்நிலையில், கொழும்பு தாமரைத் தடாக வீதியின் நடைபாதையில் கலைஞர்களின் கை வண்ணங்களில் அமையப்பெற்ற ஓவியங்கள், சிற்பங்கள் உள்ளிட்ட கலைப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளதுடன் விற்பனைக்காகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ள கலையம்சங்களின் ஒரு பகுதியினை படங்களில் காணலாம்.

# கொமன்வெல்த் கொழும்பில் நடக்கும்; நம்பிக்கையுடன் உள்ளது அரசு

## சஜின்வாஸ் லண்டன் விரைவு

(கொழும்பு)

கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்தும் பொறுப்பு இலங்கையிடமிருந்து பறிக்கப்படலாம் என்று எழுந்த அச்சத்தை அடுத்து, அதனைத் தடுத்து நிறுத்தும் அவசர முயற்சிகளில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இதன் ஒரு கட்டமாக, ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜின் வாஸ் குணவர்த்தன, அவசர அவசரமாக, கடந்தவாரம் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

வரும் ஏப்ரல் மாதம் லண்டனில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்துக்கு முன்னதாக, இலங்கை விவகாரத்தை விவாதிக்க வேண்டும் என்று கனடா அழுத்தம் கொடுத்து வருகிறது

கொமன்வெல்த் மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என்று கனடா அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், இநத வாய்ப்பு பறிபோய் விடுமோ என்று அரசாங்கம் கலக்கமடைந்துள்ளது.

இதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன கடந்த வாரம் அவசரமாக லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் உயர்அதிகாரி மஜிந்த ஜெயசிங்கவுடன் இணைந்து அவர், கடந்த வியாழக்கிழமை கொமன்வெல்த் செயலர் கமலேஸ் சர்மாவை சந்தித்து நீண்டநேரம் உரையாடினார்.

எனினும், கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டால், கொமன்வெல்த் செயலரால் இலங்கையைக் காப்பாற்ற முடியாது என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அமைச்சரவை நடவடிக்கைக் குழுவில், அவுஸ்ரேலியா, பங்களாதேஷ், கனடா, ஜமைக்கா, சியரா லியோன், தன்சானியா, ரினிட்டாட் அன்டுபாகோ, வனாட்டு, மாலைதீவு ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் விவகார அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட்டையும் சஜின் வாஸ் குணவர்த்தன சந்தித்துப் பேசியுள்ளார்.

மேலும் லண்டனில் உள்ள பார்க் விடுதியில் கடந்த புதன்கிழமை மாலை சுமார் 15 பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து விருந்து கொடுத்த சஜின்வாஸ் குணவர்த்தன, அவர்களை இலங்கைக்கு ஆதரவு அளிக்கும்படி கோரியுள்ளார்.

இதற்கிடையே, கொமன்வெல்த் செயலர் கமலேஸ் சர்மா அடுத்த மாதம் 10 ஆம் நாள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள கொமன்வெலத் தலைவர்களின் உச்சி மாநாடு தொடர்பாக கலந்துரையாடுவதற்கான வழக்கமான பயணமே இது என்று வெளிவிவகாரச் செயலர் கருணாரத்ன அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பு வரும் கமலேஸ் சர்மா வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார் என்றும அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல்களின் போது. கொமன்வெல்த் மாநாட்டை இலங்கையில் நடத்தும் முடிவுக்கு எதிரான கனடா தலைமையிலான நாடுகளின் முயற்சி குறித்து கலந்துரையாட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை விவகாரம் குறித்து ஆராய உடனடியாக கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் அவசர கூட்டத்தைக் கூட்டுமாறு கொமன்வெல்த் அமைப்பிடம் கனடா கோரியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் ஓயாத வெள்ள அவலம்: தற்காலிக முகாம்கள் 40 திறப்பு

Disaster Management Center
ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය
அனர்த்த முகாமைத்துவ நிலையம்



(கொழும்பு)

அதிக மழையுடன் கூடிய வானிலையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக இடம்பெயர்ந்த ஆறாயிரத்து 196 பேர் 40 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

வெள்ளநீர் படிப்படியாக குறைந்து வருவதாக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களே மழையினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிடுகிறது.

எவ்வாறாயினும் வெள்ள நிலைமையினால் சில பகுதிகளில் பாதிக்கப் பட்டிருந்த போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளது. குறிப்பாக பொலனறுவை - மட்டக்களப்பு பிரதான வீதி, கண்டி - மட்டு. ஆகிய வீதிகள் திறக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான உரிய நடவடிக்கைகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த புதிய அலுவலர்கள் நியமனம்

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காகப் புதிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக நாடு முழுவதும் புதிய அலுவலர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதன் முன்னோடியாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச் சின் மூலம், தேசிய ஒருமைப் பாட்டு ஒருங்கிணைப்பாளர் தரம் மூன்று பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

இந்தநிலையில் இந்த பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளின் நன்மை கருதி, எதிர்வரும் 17 ஆம் திகதி ஹட்டன் சீடா வளநிலையத்தில் வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சபை உறுப்பினர் கனபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் பங்குகொள்ள உள்ளவர்கள் 071 2262063 என்ற தொலைபேசி இலககத்துடன் தொடர்பு கொணடு பதிவுசெய்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

## இலங்கை அகதிகள் சுமாத்ரா தீவிற்கு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்கு செல்லும் வேளை கைது செய்யப்பட்டு இந்தோனேஷிய முகாமிலிருந்த இலங்கையர்கள் சிலர் வேறு தீவிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தோனேஷிய ராடன் தீவில் இருந்த 13 பேர் சுமாத்ரா தீவிற்கு மாற்றபபட்டுள்ளனர். இந்த மாத முற்பகுதியில் அவுஸ்ரேலியாவிற்கு செல்ல முற்பட்டவேளையில் கைது செய்யப்பட்ட 40 பேர் இந்தோனேஷிய முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் குறித்த முகாமில் 20 பேர் வரை மட்டுமே இருப்பதற்கான வசதிகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக 13 பேர் வேறு முகாமிற்கு மாற்றப்படுவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

# வருமானம் பெறும் நோக்குடன் சிறுவர் துஷ்பிரயோகம்

## விழிப்புடன் இருக்கக் கோரிக்கை



(கொழும்பு)

கைக்குழந்தைகளை, சிறுவர், சிறுமியரை வைத்துக்கொண்டு பிச்சை எடுப்போரை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சிறுவர், பெண்கள் பாதுகாப்பு அதிகாரசபை இது தொடர்பாக துரித நடவடிக்கை எடுத்து வருவதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப் படுபவர்களிடமிருந்து குழந்தைகளைப் பெற்று சிறுவர் பராமரிப்பு இல்லங்களிடம் ஒப்படைக் கப்படும். சிலர் குழந்தைகளை, சிறுவர், சிறுமியரை அழைத்துக்கொண்டு பிச்சை எடுப்பதை ஒரு தொழிலாக கொண்டுள்ளனர்.

சிலர் குழந்தைக்கு மயக்க மருந்தை ஊட்டி பரிதாபமாக காண்பித்து பிச்சை எடுக்கின்றனர்.

இதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் துன்புறுத்தல்களைக் கருத்திற்கொண்டு பொலிஸ் மாஅதிபர் விசேட சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதனடிப்படையில் இவர்கள் உடனடியாக கைது செய்யப்படுவார்கள். குழந்தைகளைச் சுமந்தவாறோ, சிறுவர் சிறுமியரை அழைத்துக்கொண்டோ பிச்சை எடுப்பவர்களைக் கண்டால் 1929 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன் கைக்குழந்தையை சுமந்தவாறோ சிறுவர், சிறுமியரை அழைத்துக்கொண்டோ பிச்சை எடுப்பவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டாம் என்றும் பொதுமக்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# பாடசாலைகளின் பௌதீக வளங்களை மேம்படுத்த புதிய செயற்றிட்டம்

## - ஜனாதிபதியின் கவனத்திற்கு சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் பின்தங்கியதும் பாதிக்கப்பட்டதுமான பாடசாலைகளின் அத்தியாவசிய மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது குறித்தும் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் மூலதனச் செலவுகள் தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியினதும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினதும் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

குறிப்பாக கடந்தகால போர்ச் சூழலில் பாதிக்கப்பட்டும் மற்றும் பின்தங்கியதுமான நிலையில் வடபகுதி பாடசாலைக் கட்டடங்களின் புனரமைப்பு, நிர்மாணம் மற்றும் மூலதனச் செலவினங்கள் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொண்டு சென்றுள்ளார்.

மேலும் கழிப்பறை வசதிகள் இல்லாத, குடிநீர் வசதியற்ற மற்றும் வேறு அடிப்படைத் தேவைகளை எதிர்நோக்கியுள்ள பாடசாலைகள் தொடர்பில் அமைச்சரவர்கள் இவ்விடயத்தினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்திலும் வலியுறுத்தியுள்ளார்.



தும்பளை ஸ்ரீ நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வின்போது கும்பம் உள்வீதி வலம்வருவதைக் காணலாம். (62)

# 300 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்

(வேலணை)

வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக தீவக பிரதேச மாணவர்களுக்கு வடமாகாண சபையினால் 300 ஆண், பெண் இருபாலாருக்குமான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலணைப்பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாணவர்களில் 150 பேருக்கும், ஊர்காவற்றுறை பிரதேச எல்லைக்குட்பட்ட மாணவர்களில் 75 பேருக்கும், நெடுந்தீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாணவர்களில் 75 பேருக்கும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசங்களில் பின்தங்கிய நிலையில் வறுமையில் வாழும் குடும்பங்களின் மாணவர்களுக்கே இத்துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் அம்மாணவர்கள் கஷ்டமின்றி கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் சி.ந. கருணாகரகுருமூர்த்தி அறிவித்துள்ளார். (175)



ஆனையிறவு - தட்டுவான் கொட்டியில் சேதமடைந்த கிறிஸ்தவ தேவாலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுவதைக் காணலாம். (90)

# விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விஞ்ஞானம், கத்தோலிக்க சமயம், மனைப்பொருளியல், 2 ஆம் மொழி (சிங்களம்) ஆகிய பாடங்களிற்கான பதவிக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப்பப் படிவத்தை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (11)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளின் தொல்லை அதிகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் அதிகரிப்பும், தொல்லையும் தொடர்ந்து இடம்பெறுவதால் இங்குள்ள மக்கள், தாம் போக்குவரத்தை மேற்கொள்வதற்கும் அன்றாட செயற்பாடுகளை செய்வதற்கும் பல்வேறு சிரமங்களை எதிரநோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இம்மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள், மாவட்டச்செயலகம், நீதிமன்றம், பொலிஸ்நிலையம், பாடசாலைகள் போன்றவற்றுக்கு முன்பாக கட்டாக்காலி கால்நடைகள் குறிப்பாக மாடுகள் ஆடுகள் தமது பொழுதைக் கழிக்கின்றன.

இவ்வாறான இடங்களுக்கு முன்பாக கால்நடைகள் இரவு நேரங்களில் படுத்து தூங்குவதனால் இரவு வேளைகளில் இவ்வீதி யூடாகப் பயணங்களை மேற்கொள்ளும் வாகனங்கள் விபத் துக்களை எதிர்நோக்குவதாகவும், விபத்துகள் இடம்பெற்ற சம்பவங்களும் உண்டு என சாரதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதைவிட, காலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் கட்டாக்காலி கால்நடைகள் அங்குள்ள இடங்களை அசிங்கப்படுத்திவிட்டுச் செல்வதால் அவர்களே துப்புரவு செய்வதாகவும் இதனால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டும். அத்துடன் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்த உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

## புராணபடனப்போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களுக்கிடையில் நடாத்தப்படும் புராணபடனப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 1 மணிக்கு சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்த ஆசிரியர்களை உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (11)

# சுயதொழில் ஓய்வூதியத்திட்டம் 48 பயனாளிகள் தெரிவு

(சாவகச்சேரி)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தின் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இணைந்து கொண்ட இவ்வருடம் இளைப்பாறும் வயதான 60 வயதைப் பூர்த்தி செய்யவுள்ள 48 பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் யாழ்.மேலதிக அரசாங்க அதிபரினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி 48 பயனாளிகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கி அவர்களது 60 வயது பூர்த்தியடையும் போது ஓய்வூதியம் வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

48 பயனானிகளின் பெயர் விபரங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (11)

# முரசின் இன்றைய பலன்

(28.01.2013 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 15 ஆம் திகதி. நட்சத்திரம் ஆயிலியம் சித்தம் மாலை 06.29 வரை. திதி பிரதமை முற்பகல் 11.45 வரை.

இராகுகாலம் 8.06 - 9.36

வரை. சுபநேரம் 12.36 - 2.06 வரை.


சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெளிவட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். போட்டி இருக்கும். கவனமுடன் செயல்படுவதால் தொழில் சிறக்கும். வெளியூ நற்செய்தி. |
| ரிஷபம் | சிறப்பான நாள். வெற்றிகரமான திருப்பம். தொழில் சிறந்து, பணவரவு மிகும். குடும்ப தேவைகள் நிறைவேறும். உறவினர் வருகை மகிழ்ச்சி. |
| மிதுனம் | பிரச்சினையாக இருந்தவைக்கு தீர்வு கிடைக்கும். புத்துணர்வு. தொழில் முன்னேற்றம். உபரி வருமானம். தாய்வழி உறவினரால் நன்மை. |
| கடகம் | கடினமான காரியங்களும் எளிதில் முடியும். கூடுதல் வேலை. கூடுதல் இலாபம். சகோதர ஒற்றுமை. கல்யாணப் பேச்சு. ஆபரணம் சேரும். |
| சிம்மம் | சஞ்சலம் மறையும். பெற்றோரின் விருப்பம் நிறைவேற்றுவீர்கள். அந்தஸ்து உயரும். சிந்தனைத் திறன் பெருகும். மாறுபட்டவர்களுக்கும் உதவுவீர்கள். |
| கன்னி | இரக்கம், கருணைத்தன்மை. உதவி பெற்றவர் வாழ்த்துவர். தொழிலில் அனுகூலம். பணவரவு திருப்தி. தாயின் தேவை பூர்த்தி. நட்புக்கு உதவி. |
| துலாம் | புதிய அனுபவம். பழிப்பனைகள் செயல் வெற்றிக்கு உதவும். தொழில், போட்டி குறையும். கடன் மீளும். வழக்கு சாதகம். உறவுகள் பாசம் பொழிவர். |
| விருச்சிகம் | அடுத்தவர் பணியையும் செய்ய நேரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழிலில் அனுகூலநிலை. புதிய செலவுகள் வரும். உறவினர்களின் ஆதரவு. |
| தனுசு | முக்கிய பணி நிறைவேறும். திருப்திகரமான வரவு. உடல் நலம் சீராகும். மேலதிகாரி ஒத்துழைப்பார். நீண்ட நாள் பிரச்சினை தீரும். |
| மகரம் | சந்தோசம் தரும் நிகழ்வுகள். புத்துணர்வும், செயல் திறனும் வளரும். கூடுதல் பணி. தேவையான பணவசதி. பொருள் வாங்குவீர்கள். |
| கும்பம் | எல்லோரிடமும் அன்பும், கருணையும். உதவிகளால் சமூகத்தில் நற்பெயர். தொழில், புதிய பரிமாணம். அதிக இலாபம். குடும்ப விருப்பங்கள் நிறைவேற்றும். |
| மீனம் | குடும்பத்தார் ஆதரவு. உறவினர் தொல்லை குறையும். சேமிக்க தொடங்குவீர்கள். ஆன்மிக நாட்டம். புது தொழில். முக்கிய முடிவுகள். |

# பிரெஸ்னன், பெல் சிறப்பான செயற்பாடு; இங்கிலாந்து வெற்றி

(தர்மசாலா)

ரிம் பிரெஸ்னன், இயன் பெல் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் இந்திய அணிக்கெதிரான ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது. இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று இந்தியாவின் தர்மசாலாவில் நடைபெற்றது. ஏற்கனவே, தொடரை இந்திய அணி வென்றுள்ள நிலையில் கடைசிப் போட்டியில் வெல்ல வேண்டும் என்ற முனைப்புடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது.




நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. 13 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அடுத்தடுத்து இரு விக்கெட்டுக்களை இழந்த இந்திய அணி, தொடர்ந்தும் விக்கெட்டைப் பறிகொடுத்து தடுமாறியது. ஒரு கட்டத்தில் 79 ஓட்டங்கபைப் பெற்றிருந்த நிலையில் இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த ஜடேஜா, ரெய்னாவுடன் இணைந்து பொறுப்புடன் ஆடினார். இந்த ஜோடி 78 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரிக்கப்பட்டது. தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய ரெய்னா, இந்திய அணியை கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வழிவகுத்தார். இறுதியில் இந்திய அணி 49.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுரேஸ் ரெய்னா 98 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 83 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் 15 ஓட்டங்களைப் பெற்றவேளை ஒரு நாள் அரங்கில் ரெய்னா 4000 ஓட்டங்களைக் கடந்தார். மற்றும் ஜடேஜா 39, புவனேஸ்வர் குமார் 21, கம்பீர் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரிம் பிரெஸ்னன் நான்கு, பின் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.




பதிலுக்கு 227 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, இயன் பெல்லின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் இங்கிலாந்து அணி 47.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் 143 பந்துகளை எதிர்கொண்ட இயன் பெல் ஒரு சிக்ஸர், 13 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 113 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் இப்போட்டியில் 96 ஓட்டங்களைப் பெற்றவேளை ஒரு நாள் அரங்கில் இயன் பெல் 4000 ஓட்டங்களைக் கடந்தார். மற்றும் இயன் மோர்கன் மூன்று சிக்ஸர் அடங்கலாக ஆட்டமிழக்காது 40, குக் 22, ரூத் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜடேஜா, இசாந் ஷர்மா, சமி அகமட் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். ஐந்து போட்டிகளை கொண்ட ஒரு நாள் தொடரில் இந்திய அணி 3-2 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக இயன் பெல், தொடர் நாயகான ரென்யா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# கால்பந்தில் கலவரம்; 21 பேருக்கு தூக்குத்தண்டனை

கால்பந்து போட்டியின் போது கலவரத்தில் ஈடுபட்ட 21 பேருக்கு, எகிப்தில் தூக்குத்தண்டனை விதிக்கப் பட்டது.

எகிப்தின் போர்ட் செட் என்ற இடத்தில், கடந்த பெப்ரவரி மாதம் நடந்த உள்ளூர் கால்பந்து போட்டியில் அல்-மஸ்ரி அணி தனது பரம எதிரியான அல்-அஹ்லி அணியை வீழ்த்தியது.

போட்டி முடிவில் மைதானத்தில் இருந்த 13 ஆயிரம் அல்-மஸ்ரி இரசிகர்கள், அங்கிருந்த குறைந்த அளவிலான (1,200 பேர்) அல்-அஹ்லி அணி இரசிகர்கள், வீரர்கள் மீது கற்கள், ஆயுதங்களால் தாக்குதல் நடத்தினர்.

இதில் 74 பேர் பலியாகினர். 1000இக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். தொடர்ந்து கெய்ரோவில் நடந்த கலவரத்தில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்த விசாரணை, கெய்ரோ நீதிமன்றில் நடந்தது. இதில் நேற்று முன்தினம் 21 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. தீர்ப்பை எதிர்த்து, தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ள போர்ட் செட் சிறை அருகே பாதுகாப்பு வீரர்களுடன் பயங்கர கலவரத்தில் ஈடுபட்டனர்.




தெருக்களில், அடையாளம் தெரியாத பலரும் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டதாக தெரிகிறது. இதனால் சிறையை சுற்றியுள்ள தெருக்களில் பொலிஸார் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டு, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

# சகோதரர்கள் சாதனை



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் இரட்டையர் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் சகோதரர்கள் பொப் பிரேயன், மைக் பிரேயன் ஜோடி கிண்ணம் வென்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் முதல் நிலை ஜோடியான அமெரிக்க இரட்டை சகோதரர்கள் பொப் பிரேயன், மைக் பிரேயன் ஜோடி 6-3, 6-4 என்ற நேர் செட்டில் நெதர்லாந்தின் ரொபின் ஹாஸ் இகோர் சிட்ஜ்ஸ்லிங் இணையை வீழ்த்தி பட்டத்தை வென்றது. 34 வயதான பிரேயன் சகோதரர்களுக்கு இது 6 ஆவது அவுஸ்ரேலிய ஓப்பன் பட்டமாகும். ஒட்டு மொத்தமாக அவர்களது இரட்டையர் கிராண்ட்ஸ்லாம் பட்ட எண்ணிக்கை 13ஆக உயர்ந்தது.

இதன் மூலம் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றிய ஜோடி என்ற வரலாற்று சாதனையை பொப்மிமைக் பிரேயன் நிகழ்த்தியுள்ளனர். இதற்கு முன்பு அவுஸ்ரேலியாவின் ஜோன் நியூ காம்ப்மிடோனி ரோஜ் இணை 12 பட்டங்கள் வென்றதே சாதனையாக இருந்தது.

வெற்றியின் பின் கருத்துத் தெரிவித்த சகோதர்கள் ஜோடி, சாதனை முறியடித்ததில் மகிழ்ச்சி. தொடர்ந்தும் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி தாய் நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதே எங்கள் நோக்கம்.

அடுத்த ஆண்டும் அவுஸ்ரேலிய ஓப்பன் இரட்டையர் பட்டத்தை வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. எங்களுக்கு தொடர்ந்தும் ஆதரவு தெரிவித்து வரும் இரசிகர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள். உங்கள் ஆதரவே நாங்கள் வெல்லக் காரணம் எனத் தெரிவித்தனர்.

# ஜோகோவிச் வசம் கிண்ணம்



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சேர்பியாவின் ஜோகோவிச் நான்காவது முறையாக கிண்ணத்தை வென்றுள்ளார்.


அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டம் நேற்று மெல்பேர்னில் நடைபெற்றது. இதில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேயும், சேர்பியாவின் ஜோகோவிச்சும் பலப்பரீட்சை நடத்தினர்.

மூன்றாவது (2010, 2011) முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ள இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே ஜோகோவிச்சை வீழ்த்தி கிண்ணம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்கமைய முதல் செட்டை 7-6 என்று கைப்பற்றி முர்ரே முன்னிலை பெற்றார். இதிலிருந்து சுதாகரித்துக்கொண்ட ஜோகோவிச் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடர்ந்து இடம்பெற்ற மூன்று செட்களையும் கைப்பற்றி கிண்ணத்தை வென்றார். இறுதியில் ஜோகோவிச் 6-7 (2-7, 7-6 (7-3), 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது (2008, 2011, 2012) முறையாகக் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.




இதன் மூலம் நான்கு முறை கிண்ணம் வென்ற ஐந்தாவது வீரர் என்ற சிறப்பையும் ஜோகோவிச் பெற்றுக்கொண்டார். இதற்கு முன்னர் பெடரர், அகாசி, ரோஸ்வலல், ஜோக் கிராவ்போர்ட் ஆகியோர் நான்கு முறை கிண்ணம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# நிரோஜ், கபிலன், கனிஷ்ரன் சிறப்பாட்டம் மத்திய கல்லூரி அபார வெற்றி



நிரோஜ்



கபிலன்



கனிஷ்ரன்

(வட்டுக்கோட்டை)

நிரோஜ், கபிலன், யூனியஸ் கனிஷ்ரன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், யாழ். மத்திய கல்லூரி அணிக்குமிடையிலான போட்டி ஒன்று கடந்த 21,22ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி, கபிலன், நிருபன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஆரம்பத்தில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் மாதவரூபன், அபிராஜ் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் நெருக்கடியிலிருந்து மீண்டது. இறுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அபிராஜ் 55 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி அடங்கலாக ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும், மாதவரூபன் 93 பந்துகளை எதிர்கொண்டு 29 ஓட்டங்களையும் பெற்றனர். மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் கபிலன் 20 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், நிருபன் 59 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி, பிரவீந், சோபிநாத்சுவன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியால் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யூனியஸ்கனிஷ்ரன் 59 பந்துகளை எதிர்கொண்டு 24 ஓட்டங்களையும், சன்சஜன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சோபிநாத்சுவன் 19 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், பிரவீந் 27 ஓட்டங்களைக்கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

55 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மதுஷனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுஷன் 57 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 60 ஓட்டங்களையும், மாதவரூபன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சௌமிதரன் நான்கு, அலன்ராஜ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 197 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி, முதல் இனிங்ஸில் விட்ட தவறுகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஆடியது. இதில் நிரோஜ், கபிலன், யூனியஸ் கனிஷ்ரன் ஆகியோர் சிறப்பாக ஆடி அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி, இரண்டாவது இனிங்ஸிற்காக மூன்று விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்று, ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதில் நிரோஜ் 90 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களையும், கபிலன் 103 பந்துகளை எதிர்கொண்டு எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 54 ஓட்டங்களையும், யூனியஸ் கனிஷ்ரன் 56 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சோபிநாத்சுவன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)

விளையாட்டுச் செய்திகள்

## கலந்துரையாடல்

(உடுவில்)

உடுவில் பிரதேச விளையாட்டுத் தொடர்பாக முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 11.00 மணிக்கு உடுவில் பிரதேச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பதிவு செய்யப்பட்ட கழங்களைச்சேர்ந்த தலைவர் அல்லது செயலாளரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு விளையாட்டு உத்தி யோகத்தர் கௌசிகன் கேட்டுள்ளார்.

(93)

## மகாஜனாவில் நாளை மரதன் ஓட்டம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு வீர,வீராங்கனைகளுக்கான மரதன் ஓட்டம் நாளை காலை 6.00 மணிக்கு கல்லூரி முன்றில் இடம்பெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இல்லங்களுக்கிடையில் இடம்பெறவுள்ள இம்மரதன் ஓட்டப் போட்டி வயது அடிப்படையில் இடம்பெறும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (93)


## சிட்னியில் இன்று 2ஆவது ருவென்ரி–20

(சிட்னி)

அவுஸ்ரேலிய,இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் சிட்னியில் இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே, முதலாவது போட்டியில் ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ள இலங்கை அணி, இப்போட்டியில் வென்று தொடரைக் கைப்பற்ற முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## முகாமைத்துவ உபாயமாக கராத்தே கலையை முன்னெடுக்கவேண்டும்



கராத்தே தற்காப்பு கலையை விளையாட்டாக மாத்திரமன்றி வர்த்தக நிறுவனங்களுக்கான முகாமைத்துவ உபாயமாகப் பயன்படுத்த வேண்டியது அவசியம் என தேசிய கராத்தே பயிற்றுநர் ஆர். ஜே. எட்வர்ட் தெரிவித்துள்ளார்.


கராத்தேயை தற்பாதுகாப்புக் கலையாக மாத்திரமில்லாமல், அதனுடைய எண்ணக்கருக்களை வர்த்தக நிறுவனங்களின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக மாற்றி அமைத்துக் கொள்ளும் திட்டமாகவும் பயன்படுத்தலாம் என்ற யோசனையை அவர் முன்வைத்துள்ளார்.

கராத்தே என்பது கட்டுப்பாடு மற்றும் ஒரு நிலைப்படுத்தலுடன் தொடர்புடையது. கராத்தே வீரர் கட்டுப்பாட்டுடனும் அதிக கவனத்துடனும் செயற்படுபவர். அதற்கு அப்பால் விளையாட்டின் மூலம் ஈட்டிக்கொள்ளக் கூடிய ஆன்மீக பெறுமதியையும் அறிந்துகொண்டவராவார்.

கராத்தே பயிற்சி பெற்ற ஊழியர்கள் இருந்தால், வர்த்தக நிறுவனமொன்றின் கட்டுப்பாடு, உற்பத்தித்திறன், ஆற்றல் ஆகியன வளர்ச்சியடையும் அத்துடன் ஊழியர்கள் நட்பாக பழகக் கூடிய சந்தர்ப்பமும் ஏற்படும் எனக் குறிப்பிட்டார்.

இன்று உலகில் விளையாட்டு என்பது மிகப் பெரும் சக்தி வாய்ந்த துறையாக மாறிவிட்டது. இதற்கு ஏற்ப இலங்கைத் தேசமும் பயணிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்கு ஏற்றவாறு கராத்தே கலையை விஸ்தரித்து அனைத்துத் தரப்பும் கற்கக்கூடிய வகையில் வழிவகை செய்யவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## அதிக பயிற்சிப் போட்டிகள் சாதிக்க வழிவகுக்கும்



(கொழும்பு)


பயிற்சி செயலமர்வுகளில் அதிகம் பங்குபற்றுவதை விட, பயிற்சிப் போட்டிகளில் அதிகம் விளையாடுவதன் மூலம் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை வெற்றிகொள்ள முடியும் என இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி ஷசிகலா சிரிவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ருவென்ரி-20 உலகக் கிண்ண போட்டிகளின் போது விடப்பட்ட தவறுகளையும் கவனயீனங்களையும் திருத்திக் கொண்டு சிறப்பாக செயற்படவுள்ளோம்.

போட்டிகளின்போது கிடைக்கப்பெற்ற சிறந்த அனுபவங்களுடன் உடல், உளரீதியாக எமது அணியின் வீரர்கள் சிறந்த நிலையில் உள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களாக பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம். போட்டிகளின்போது சிறப்பாக விளையாட திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் பெப்ரவரி 17ஆம் திகதி வரை இந்தியாவில் நடை பெறவுள்ளது. குழு ஏ இல் இடம்பெற்றுள்ள இலங்கை அணி இரண்டு பயிற்சிப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளது.

முதலாவது பயிற்சிப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி நியூசிலாந்திற்கு எதிராகவும் இரண்டாவது பயிற்சிப் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி தென்னாபிரிக்க அணிக்கு எதிராகவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிறுவர்போராளிகள் எதிர்நோக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் 13

– ருவான் எம் ஜயதுங்க –

சமூக தொடர்புகள் பிள்ளையின் நடத்தையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தச் சிறுவர்களைக் கடத்திச் சென்று முகாம்களில் வைத்தபோது, ஆரோக்கியமான சமூகத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு ஒரு வழியும் இருக்கவில்லை. 1998 ஒக்ரோபர் 14இல் 26 சிறுவர்போராளிகள் எல்.ரி.ரி.ஈயை கைவிட்டு இலங்கை பாதுகாப்பு படையினரிடத்தில் சரணடைந்தார்கள். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் சிறுவர் போராளிகள், எல்.ரி.ரி.ஈயை விட்டு ஓடிவந்து இலங்கை அதிகாரிகளிடம் சரணடைந்த பல்வேறு சம்பவங்கள் நடந்துள்ளன. இந்தச் சிறுவர்கள், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (சி.பி.ஏ) வழிகாட்டலின் கீழ் மறுவாழ்வு பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டார்கள். எல்.ரி.ரி.ஈயின் பிடியில் இருந்தபோது தாங்கள் எதிர்கொண்ட கஷ்டங்களை அவர்கள் தெரியப்படுத்தினார்கள்.

எஸ்ஈ என்பவர், அவரது பெற்றோர்களிடமிருந்து வலுக்கட்டாயமாக கடத்தப்பட்டு, எல்.ரி.ரி.ஈயில் ஒரு சிறுவர் போராளியாக சேர்க்கப்பட்டபோது அவருக்கு வயது 11. பயிற்சிக் காலத்தின்போது அவரை அடித்து, கட்டளைகளுக்கு கீழ்படியாவிட்டால் கொல்லப்படுவார், என அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அவர் ஒரு சிறுவர்போராளியாக மாறிய பின்னர், புத்தகங்களுக்குப் பதிலாக அவர் ஏ.கே 47 மற்றும் கையெறி குண்டுகளை காவித் திரிந்தார். எஸ்ஈ யும் ஏனைய சிறுவர்களும் உடற் பயிற்சி மற்றும் அரசியல் போதனைகள் என்பனவற்றுக்கு உட்படுத்தப் பட்டார்கள். மிகவும் சிறியவரான எஸ்ஈ, எண்ணற்ற திகில் சம்பவங்களுக்கு சாட்சியாக இருந்துள்ளார். அது அவரது உளவியற் செயற்பாடுகளை மோசமாகப் பாதித்தது. சித்திரவதைகளை பார்க்கும்படி அவர் கட்டாயப்படுத்தப்பட்டதோடு, அதைப் பாதிக்கப்பட்டவர்கள் மீது பிரயோகிக்கும்படியும் கட்டாயப் படுத்தப்பட்டார். ஆரம்ப விழாவின்போது, ஒரு நூல் மாலையில் இணைக்கப்பட்ட சயனைட் குப்பி ஒன்று அவருக்கு வழங்கப்பட்டதுடன், மற்றும் எதிரியிடம் அகப்பட நேர்ந்தால் அதை கடித்து தின்ன வேண்டும் என்றும் அவருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

எஸ்ஈ, பல ஆண்டுகளாக இத்தகைய கொடூரமான நடவடிக்கைகளை கண்டுள்ளார். ஒருமுறை அவர்களுடைய போட்டிக் குழு அங்கத்தவர் ஒருவரை அவரது மூத்த அங்கத்தவர்கள் கொலை செய்வதையும் அவர் கண்டார். அவரைப் போன்ற ஏனைய சிறுவர்களுடன் இணைந்து இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஏராளமான தாக்குதல்களில் அவர் பங்கெடுத்துள்ளார். வளர்ந்த போராளிகளுக்கு ஒரு துணைப்படை போல அவர்கள் கடமையாற்றினார்கள். எஸ்ஈ என்கிற சிறுவர்போராளி, தனது சக நண்பர்கள் சிலர் ஒரு மோட்டார் சூட்டினால் மரணமடைவதையும் கண்டார். இன்று எஸ்ஈ ஒரு புனர்வாழ்வு மையத்தில் இருக்கிறார், ஆனால் அவரது கொடூரமான உளவியல் வடுக்கள் அவரைவிட்டு முற்றாக விலகிப் போய்விடவில்லை. அவர் மனநிலை வெறித்தனம் மற்றும் ஒதுக்கப்பட்ட நிலை மற்றும் சில நடத்தை கோளாறுகளினால் பாதிக்கப்பட்டுள்ளார். ஒரு காலத்தில் அவர் ஒரு சிறுவர்போராளியாக மாறுவதற்கு முன்னர், தான் ஒரு மருத்துவராக வரவேண்டும் என்று அவர் கனவு கண்டார். ஆனால் இன்று அவரது இலட்சியங்கள் யாவும் மாறிவிட்டன. அவருக்கு அவரது கல்வியில் ஆர்வமில்லை. அவருக்கு நடத்தைக் கோளாறுகள் உள்ளன, விசேடமாக அடிக்கடி ஏற்படும் வெறித்தனம். அவர் உணர்வு பூர்வமாக அவரது பெற்றோரை விட்டு பிரிந்துவிட்டார். ஒருகாலத்தில் அவர் அறிவுத் திறன் மிக்க அப்பாவி மாணவனாக இருந்தார், ஆனால் இன்று ஈழப் போரினால் பாதிக்கப்பட்ட மற்றொரு சிறுவனாக மாறிவிட்டார்.

(தொடரும்)

# ஏ.கருணாநிதி

– R.P. ராஜநாயஹம் –



"மாங்கல்யம்" என்ற படத்தில் ஏ.கருணாநிதி தான் குளித்தலைக்கு செல்லவிருப்பதை வி.எம். ஏழுமலை என்ற நடிகரிடம் இரவு விடைபெறும் போது ஓட்டை இங்கிலீஷில் சொல்வார்: "Good Morning! I am going to ' the' Kulithalai. Good Morning!"

குழந்தைத்தனமான காமெடியன்! அந்த விடைத்த மூக்கு அவரது காமெடிக்கு மிகவும் கைகொடுத்தது.

பெண் வேடமிட்டு அவர் வந்தால் கொனஷ்டைகள் பிரமாதமாக இருக்கும். கதாநாயகி படத்தில் பெண் வேடமிட்டு அவர் சொல்லும் "நாங்கல்லாம் ரொம்ப கௌரவமான குடும்பத்தை சேர்ந்த பொம்பளைங்க" கேட்கும்போதே சிரிப்பை நம்மால் அடக்க முடியாது.

வீரபாண்டிய கட்ட பொம்மன் படத்தில் பெண் வேடத்தில் அவர் மாட்டுவண்டியோட்டும் சிவாஜிக்கு பின் உட்கார்ந்து செய்யும் கொனஷ்டைகள்! அதே படத்தில் "ஒற்றனாக நான் போகிறேன் அரசே" என்பார். சிவாஜியிடம் வெள்ளையர் படையெடுத்து வருவதை தெரிவிக்கும்போது "நான் எவ்வளவோ தடுத்துப் பார்த்தேன். முடியவில்லை" - ஏ.கருணாநிதி பதட்டத்துடன் சொல்லும்போது வேடிக்கையாயிருக்கும்.

குழந்தைத்தனமான காமெடி செய்தவர் என்றாலும் "பாலும் பழமும்" படத்தில் எம்.ஜி.ஆர் - வி.என். ஜானகி திருமணம் பற்றி அரசியல் பேசியவர். "ஜானகிக்காக ராமச்சந்திரன் வில்லை ஒடைக்கலயா?"

மனோரமாவிடம் காதல் பேசிவிட்டு "வரட்டுமா" என்று வீட்டின் மேலே பார்ப்பார். மனோரமா "ஓடு புதுசா இப்பத்தான் மேலே போட்டுருக்கு. வாசல் வழியா போ" என்பார்.

மதராஸ் டு பாண்டிச்சேரி படத்தில் கண்டக்டர் நாகேஷ் உடன் சேர்ந்து டிரைவர் ஏ.கருணாநிதி அடிக்கும் லூட்டி..

அதே கண்கள் படத்தில் மலையாளி சமையல்காரராக "யாரு செத்துபோயி" என்று திகிலுடன் கேட்பார்.


"ஆதி பராசக்தி" படத்தில் ஒ.ஏ.கே.தேவரும், ஏ.கருணாநிதியும் அசுரர்கள். தேவர்களை சிறைப்பிடித்து விடுவார்கள். தேவகன்னிகைகளை பார்வையிடும்போது தேவர் ஜொள்ளு விட்டு சொல்வார்: தம்பி! இந்த தேவ கன்னிகைகளை பார்த்தவுடன் தேவப்பயல்கள் மீது இரக்கம் வருகிறது."

உடனே ஏ.கருணாநிதி அழுத்தமாக சொல்வார்: இயற்கை! இயற்கை!


முத்துலக்ஷ்மியுடன் ஜோடியாக இணைந்து நிறைய படங்கள் (கிட்டத்தட்ட நூறு படங்கள்? அல்லது நூற்றுக்கும் மேல்) நடித்தவர். மணமகன் தேவை படத்தில் இவரது ஜோடி தேவிகா.

"மாமியா ஹோட்டல்" என்ற பெயரில் கடைசி காலத்தில் உணவகம் நடத்தினார்.

எலும்புருக்கி நோயால் இறந்தார்.



# வண்ணப் பறவை மயில்!



பறவை இனங்களில் வண்ணக் கலவையான படைப்பு மயில். மயில்களில் நீல நிறம், பச்சை நிறம் என இருவகை உண்டு.

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள மயில்கள் நீல நிற வகையைச் சேர்ந்தவை. மலேசியா, இந்தோனேசியா போன்ற தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வாழ்பவை பச்சை நிற வகையைச் சேர்ந்தவை.

இங்கிலாந்தில் நோரிச் நகருக்கு அருகில் ஆயிரம் மயில்களைக் கொண்ட பண்ணை உள்ளது. ஐரோப்பாவில் வீடுகளில் வளர்க்கும் செல்லப் பறவை மயில். இந்தியாவின் தேசியப் பறவை.

குருகுல மாணவர்களுக்கு உத்தமன், மத்திமன், அதமன் ஆகியோரின் தன்மைகளைப் போதிக்க நினைத்தார் ஒரு குரு.

மேடையில் வைக்கப்பட்டிருந்த மூன்று மாணவப் பொம்மைகளைக் காட்டி, அவற்றின் காது மற்றும் வாய் ஆகியவற்றில் நுண்ணிய துவாரம் இருப்பதைச் சுட்டிக் காட்டினார். பின்னர் -

ஒரு பொம்மையின் காது வழியே ஒரு சிறு குச்சியை நுழைத்தார். அது பொம்மையின் வாய் வழியே வெளிப்பட்டு வந்துவிட்டது.


குரு சொன்னார்: "இவன்தான் அதமன். தன் காதால் கேட்டவற்றையெல்லாம் கண்டவர்களிடமும் தனது வாயால் சொல்லி விடுவான்."

அடுத்த பொம்மையின் காதிலும் குச்சியை நுழைத்தார். அந்தக் குச்சி மற்றொரு காதின் வழியே வெளியே வந்தது. இப்போது குரு சொன்னார்: "இவன்தான் மத்திமன். இந்தக் காதில் வாங்கி அந்தக் காதின் வழியே விட்டுவிடுவான். இவனால் நன்மையும் கிடையாது, தீமையும் கிடையாது."

மூன்றாவது பொம்மைக்கு வந்தார். அதன் காதிலும் குச்சியை நுழைத்தார். அது உள்ளேயே நின்றுவிட்டது.

குரு சொன்னார்: "இவன்தான் உத்தமன். நல்லவற்றை வாழ்வில் முன்னேறப் பயன்படுத்துவான். கெட்டவற்றை மனத்திலேயே புதைத்து விடுவான். நீங்களும் இந்த உத்தமனைப் போன்று கவனமாகக் கேட்டு நல்லவற்றைப் பயன்படுத்தினால் முன்னேறலாம்!"

## உத்தமன்




# இளமையில் எழுது!

வாழ்க்கையில் வயதுடன் நமக்குக் கிடைக்கும் மற்றொரு பொருள் ஒன்று உண்டு - அதன் பெயர் அனுபவம். புத்தகங்களை மட்டும் படித்து இதைப் பெற்றுவிட முடியாது. இதைப் பெறாத வரையில் இதனுடைய மதிப்பையும் அறிய முடியாது. அத்துடன் மற்றொன்றையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அனுபவம், தீர்க்க தரிசனம் ஆகியவை நமக்குச் சக்தியை அளிக்கின்றன என்பது மட்டுமல்ல. நமது சக்தியை கவர்ந்து கொண்டும் போய்விடும். ஆகையால் இளமை இருக்கும்போதே நற்பணிகளைச் செய்துவிட வேண்டும். அதாவது கதை நாவல் எழுதும் பணிகளைச் செய்துவிட வேண்டும். நான் எவ்வளவோ பார்த்திருக்கிறேன். இளமையில் நாம் எழுதுவதை விடச் சிறப்பாக வயது முதிர்ந்தபின் எழுதிவிட முடியாது. காரணம் வயது அனுபவம் காரணமாக தயக்கமும் கௌரவமும் வந்து குறுக்கிடுகிறது.

மனித உள்ளத்தில் எழுத்தாளன் மட்டும் வசிக்கவில்லை. அங்கே சிந்தனையாளனும் வசிக்கிறான். வயது வளரவளர சிந்தனையாளனும் வளர்கிறான். ஆகையால் வயதான பிறகு எழுத்தாளன் எழுத அமரும்போது சிந்தனையாளன் ஒவ்வொரு வரியிலும் அவன் கையைப் பிடித்துக் கொள்கிறான். அவனுடைய எழுத்தில் அறிவின் ஆற்றல், தத்துவம் எவ்வளவுதான் நிறைந்திருந்தாலும் ரசனை, சுவை என்ற நோக்கில் அது குறைபாடு உடையதாகவே இருக்கும். ஆகையால் வாலிப வயதைத் தாண்டி எவன் ஒருவன் ரசானுபவத்தைப் படைக்க முயற்சிக்கிறானோ அவன் தவறு செய்கிறான் என்பதே எனது நம்பிக்கை.

மனிதனுடைய வயதில் ஒரு கட்டம் இருக்கிறது. அந்தக் கட்டத்திற்குப் பிறகு அவன் காவியமோ, நாவலோ எழுதுவது சற்றும் உசிதமல்ல. சந்தர்ப்பத்தை மதிப்பதுதான் கடமையாகும். வயோதிகம் என்பது மனிதனுக்கு துக்கம் தரும் வயதாகும். அப்போது மனிதன் மகிழ்ச்சியூட்டுகிறேன் என்று நடிக்க முயல்வது வியர்த்தம்தான்.




அன்றொருநாள் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் எழுதிய An outline of philosophy (தத்துவ ஞானத்தில் எல்லைக்கோடு) என்ற புத்தகத்தைப் படித்தேன். கடினமான நூல். கணிதம், வேதாந்தம் ஆகியவற்றில் பயிற்சி உள்ளவர்களே அதை நன்கு புரிந்துகொள்ள முடியும். என்னாலும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், அந்த மனிதனுடைய எளிமை, பாமரனுக்கு புரியவேண்டும் என்ற முயற்சி ஆகியவைகளைக் கண்டு அவரிடம் ஈடுபாடும், மதிப்பும் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. பாமரனிடம் அவருக்கு அபாரமான கருணை. அடடா! பாவம்! இந்த பாமரனும் தெரிந்து கொள்ளட்டுமே என்ற ஆசை - அவருடைய ஒவ்வொரு வரியிலும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அடாடா, சிறந்த அறிவாளிகள், உண்மையான ஞானிகள் ஆகியோருடைய எழுத்துக்கும், இலக்கியம் படைக்கிறேன் என்று கூத்தடிக்கும் கோஷ்டிக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்றே என் மனம் நினைக்கிறது. அவருடைய எழுத்தையும் எச்.ஜி. வெல்ஸின் எழுத்தையும் அருகருகே வைத்துக்கொண்டு நோக்கினால் இது நன்றாக விளங்கும். பெரிய விஷயங்களை எளிமையாக சொல்லிமுடிக்க இவர்கள் செய்யும் பிரயத்தனமும் தந்திரமும் நன்றாகப் புரியும். ரஸ்ஸலின் On education (கல்வியைப் பற்றி) என்ற நூலையும் வாங்கி வைத்திருக்கிறேன். நாளைய தினம் படிக்கலாம் என்ற உத்தேசம். அடுத்த வருஷம் இங்கிலாந்து செல்வதானால் அவரை ஒருமுறை சந்திப்பதற்காகவே செல்வேன்.

**(சரத் சந்திரர் திலீப்குமார் ராய்க்கு எழுதிய கடிதத்தில்)**

# அமெரிக்காவின் மூலோபாய அக்கறை யாரை மையப்படுத்தியது?

- யதீந்திரா கட்டுரையிலிருந்து.



அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலராக நியமிக்கப்பட்டிருக்கின்ற ஜோன் கெரி தலைமையிலான வெளிவிவகாரக் குழுவின் அறிக்கையானது (SRI LANKA: RECHARTING U.S. STRATEGY AFTER THE WAR), அமெரிக்காவின் மூலோபாய ஆர்வங்களுக்கான முதலீட்டை வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களை மட்டும் கருத்தில்கொண்டு மேற்கொள்வதற்கு பதிலாக, சிங்கள மக்கள் வாழும் பகுதிகளிலும் செய்யப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்திருக்கின்றது. இது தமிழர் தரப்பு முக்கியமாக கருத்தூன்றி வாசிக்க வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கும் மேற்படி அறிக்கையானது, இலங்கையில் அதிகரித்துச் செல்லும் சீனாவின் செல்வாக்கு குறித்தும் விபரித்திருக்கின்றது. சீனா இலங்கையின் இராணுவத் திட்டங்களுக்கான கடனுதவியாக ஒரு பில்லியன் டொலர்களை வழங்கியிருப்பதாக குறிப்பிட்டிருக்கும் அறிக்கையானது, சீனா இலங்கையில் காட்டிவரும் ஈடுபாடானது, அது இப்பிராந்தியத்தில் நண்பர்களைத் தேடுவதாகவே தெரிகிறது. இதன் மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மேற்குலகின் வர்த்தகத் தொடர்புகளை இணைக்கும் நீரிணைப்புக்களில் (Straits) தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முற்படுகிறது.

இந்த அடிப்படையில் இலங்கையை முன்னிலைப் படுத்தி அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகியவை காட்டி வரும் ஈடுபாடானது, ஒரு மிகப்பெரிய விளையாட்டின் பிரதான பகுதியென்று குறிப்பிடும்படியாக அமைகிறது. இவ்வாறு சுட்டிக்காட்டிருக்கும் கெரியின் அறிக்கையானது, அமெரிக்க ஆர்வங்களுக்கு ஏற்றவகையிலான இலங்கையின் மூலோபாய முக்கியத்துவமானது, இறுதியில் இலங்கையை நிராகரிப்பதாக அமைந்துவிடக் கூடாது என்றும் எச்சரித்திருக்கிறது. இதனடிப்படையில் பரிசீலனையற்ற வகையில் செயலாற்றினால், அதன் விளைவாக, நீண்டகால நோக்கில் அமெரிக்க ஆர்வங்கள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகலாம் என்பதையே மேற்படி அறிக்கை அடிக்கோடிட்டுள்ளது.

இந்த அடிப்படையில் பார்த்தால், அமெரிக்காவின் நலன்சார் அரசியல் முன்னெடுப்புக்களுக்கு வடக்கு கிழக்கில் வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் ஒரு விடயமே அல்ல. அமெரிக்காவின் ஆர்வங்கள் நீண்டகால நோக்கில் இலங்கையை மையப்படுத்திய ஒன்றாகவே அமைந்திருக்கிறது. இதனை முன்னிறுத்தி சிந்திப்போமானால், அமெரிக்கா இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் கூடுதல் கரிசனையை வெளிப்படுத்தி வந்திருப்பதும், அதன் தொடர்ச்சியாக ஜெனிவாவில் ஒரு பிரேரணையை சமர்ப்பித்து வெற்றி கொள்ளச் செய்தமையையும் வெறுமனே தமிழர்களின் பிரச்சினையாக எவரேனும் கருதினால், அது ஒரு அடிப்படையான அரசியல் தவறாகவே அமையும்.

எனவே இங்கு அமெரிக்காவின் தமிழர் மீதான ஆர்வம் என்பது, இந்தியாவின் பிராந்திய ரீதியான பாதுகாப்பு ஆர்வங்களோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. தற்போதைய நிலையில் இந்தியாவிற்கும், இலங்கைக்குமான உறவு அல்லது முரண் என்னும் இருசோடி அரசியல் சதுரங்க ஆட்டத்தில், தமிழர்கள் ஒரு விடயம் மட்டுமே. அந்த விடயம் என்பதன் எல்லையும், இலங்கையில் ஏற்படும் ஸ்திரமற்ற நிலைமை இந்தியாவின் உள்ளக அரசியலில் சலசலப்புக்களை ஏற்படுத்தலாம் என்னும் இந்திய மத்திய அரசின் கரிசனையுடன் தொடர்புபட்ட ஒன்றாகவே இருக்கிறது. எனவே இங்கு ஆழ்ந்து நோக்குவோமாயின் ஒரு விடயம் வெள்ளிடைமலையாகும். அது - மகிந்த அரசாங்கத்தின் இறுக்கமான நடவடிக்கைகளிலேயே அனைத்தும் தங்கியிருக்கிறது. மகிந்த அரசாங்கம் இறுக்கமான அரசியல் அணுகுமுறைகளை கடைப்பிடித்தால், இவ் அரசாங்கம் தலைமை தாங்கும் இலங்கையின் மீதான மேற்குலக அழுத்தங்களும் அதிகரிக்கவே செய்யும். இவ்வாறானதொரு அழுத்தத்தை பிரயோகிக்கும் போது, ஒரு அழுத்தத்திற்கான விடயதானமாக வடக்கு கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தமிழ் மக்களின் பிரச்சினையும் க்ருத்தில் கொள்ளப்படும். எனவே தற்போது, தமிழர் பிரச்சினை சர்வதேச அரங்கில் பேசுபொருளாகியிருக்கிறதென்றால், அதன் பொருள், தற்போதைய இலங்கை மேற்கின் விருப்பங்களுக்கு ஏற்ப நகரவில்லை, மாறாக அது மேற்குலகின் விருப்பங்களின் எதிர்த்திசையில் பயணிக்க முற்படுகிறது என்பதே பொருள்.

எதிர்வரும் ஜெனிவா அமர்வில் அமெரிக்கா மேலும் சில இறுக்கமான அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடுமென்னும் அபிப்பிராயங்கள் உலவுகின்றன. அடுத்த ஜெனிவா அமர்விற்கு முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வோஷிங்டனுக்கும் பயணிக்கவுள்ளது. இதற்கு இடையில், தென்னாபிரிக்க அனுசரணையில் தமிழர் விவகாரத்திற்கான தீர்வு முயற்சிகளை மேற்கொள்வதற்கான சில முயற்சிகள் இடம்பெறவுள்ளதான செய்திகளும் வெளிவருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எஞ்சியிருக்கின்ற ஒரேயொரு நம்பிக்கை, சர்வதேசம் கைகொடுக்கும் என்பது மட்டும்தான். இத்தகையதொரு நம்பிக்கையையே ஒவ்வொரு தேர்தல் மேடைகளிலும் கூட்டமைப்பின் தலைவர்கள் பிரசாரப்படுத்தி வருகின்றனர். ஆனால் இதுவரை ஒரு இம்மியளவு கூட முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதற்கான சான்றில்லை.

உண்மையைச் சொல்வதானால், இன்றைய அரசாங்கத்தின் இறுக்கமான சில நடவடிக்கைகள்தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பலமாக இருக்கிறது. அரசாங்கத்தின் இறுக்கமே கூட்டமைப்பிற்கான ஒரு சர்வதேச அந்தஸ்தையும் கொடுத்திருக்கிறது. அரசாங்கம் தனது கடும்போக்குவாத நிலைப்பாடுகளை தளர்த்தினால், இன்றைய சர்வதேச அழுத்தங்களுக்கு என்ன நடக்கும்? இதனை பிறிதொரு வகையில் கூறுவதானால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஒரு ரணில் விக்கிரமசிங்கவாக மாறினால் இன்று எழுந்திருக்கும் அனைத்து வகையான சர்வதேச குரல்களும் அடங்கிவிடலாம். எனவே இலங்கையின் எதிர்கால அரசியல் மாற்றங்கள் அனைத்தும், அரசாங்கத்தின் இறுக்கத்திலும் தளர்விலுமே தங்கியிருக்கிறது.

ஒருவர் தனக்கு நேர்ந்ததை அல்லது தான் உணர்ந்ததை சகமனிதரிடம் விவரிக்கத் தொடங்கிய ஆதிகணத்திலேயே கதை பிறந்துவிட்டது. சகமனிதரோடு பகிர்ந்து கொண்டேயாக வேண்டும் என்னுமளவுக்கு மனதை நெம்பித் தள்ளுகிற ஒரு வாழ்வனுபவம், அதை வெளிப்படுத்தத் தோதான மொழி, உணர்ந்ததை உணர்ந்தவாறே விவரித்துவிடும் ஆற்றல்கொண்ட சொற்களின் தெரிவு - அதனோடு இசைமை கொண்ட உடல்மொழி, கதையை

# ஒரே ஒரு ஊரிலே

எழுத்தறிவு பெற்றவர்களால்
எழுத்தறிவு பெற்றவர்களுக்காகவே
எழுதப்படுகிற இந்த
சிறுகதைகளை ஒரு சமூகத்தின்
முழுமையான கண்ணாடியாகவோ
இன்னும் சற்றே மேலேறிப்போய்
உயர்வுநவிற்சியாக ஆன்மாகவோ
நிறுவ முயற்சிப்பது அராஜகம்தான்.
நவீனகல்வியும் தொழில்நுட்ப
வளர்ச்சியும் நேரச்சுருக்கமும்
சேர்ந்து உருவாக்கிய சிறுகதை
என்ற வடிவத்தை கைக்கொண்ட
சின்னஞ்சிறிய குழு, பரந்த
சமூகத்தில் காலங்காலமாக
தழைத்துநிற்கும் கதை
வடிவங்களை புறந்தள்ளியும்,
அதன் உயிர்ப்பான அம்சங்களை
உள்ளிழுத்து மறைத்துக்கொண்டும்
தன் இருப்பை தக்கவைத்துக்
கொள்ள முயற்சித்தது.

கேட்பதற்கானவர்கள் ஆகிய முன்தேவைகள் மிகத் தொடக்கத்திலேயே கதை என்பதற்கு அடிப்படையாக அமைந்துவிட்டிருந்தன. எனவே ஒரு கதை வெட்ட வெளியில் எவருக்காகவுமல்லாமல் உருவாவதற்கான அவசியம் ஏதுமில்லை. (கதையை தனக்காகவே எழுதிக் கொள்வதாக சொல்லிக் கொள்வோரை இவ்விடத்தில் மறந்துவிடவும்)

தமக்கும் இயற்கைக்குமான தொடர்பையும் தொடர்பின்மையையும் விளங்கிக் கொள்ள இயற்கையின் ஒருபகுதியாகிய மனிதகுலம் மேற்கொண்ட இடையறாத எத்தனத்திலிருந்தே கதை பிறந்தது. இயற்கையின் பிரம்மாண்டம், அதன் வினோதங்கள், யூகத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள், பேரழிவுகள், மர்மங்கள், தம்மைச் சுற்றிலும் நடந்துவரும் மாற்றங்கள் போன்றவற்றிற்கான காரணங்களைக் கண்டறிய முடியாத ஆதிமக்கள், அவற்றிற்கான காரணங்களை புனைவுகளாக கட்டமைத்தனர். இந்தப் பேரண்டத்தில் தன் இடம் எது? தான் யார்? பிறக்கும் முன் எங்கிருந்தோம்? இறப்புக்குப் பின் என்னவாகிறோம்? ஏன் இறப்பு வருகிறது? என்பன உள்ளிட்ட தம்மைப் பற்றிய விசாரங்களுக்கும்கூட அவர்கள் கதைகளையே பதிலாக முன்வைத்தனர். வாழ்வியற் சடங்குகள் எல்லாமே கதைகளாகத்தான் அவர்களது வம்சங்களுக்கு கைமாற்றித் தரப்பட்டன. இவையெலலாம் உலகம் முழுவதுமிருந்த மக்கள் சமூகத்தின் பொதுப்பண்பாக இருந்திருக்கிறது.

புராணங்களும், இதிகாசங்களும் அவற்றின் தெய்வீக மகிமைக்காக அல்லாமல் அவற்றில் பொதிந்திருந்த கதைகளுக்காகவே - கதைகளாகவே மக்களால் நினைவிற் கொள்ளப்பட்டன. ஒரு பெரும் பிரளயத்தில் உலகமே அழிந்து மீண்டும் உருவாவது, அவதாரங்கள் தோன்றி அற்புதங்களை நிகழ்த்துவது, கடல்மேல் நடந்துவருவது/ கடல் இருகூறாய்ப் பிரிந்து வழிவிடுவது - போன்ற எண்ணிறந்த கதைகள் உலகத்தின் எல்லா மதங்களிலும்- மொழிகளிலும்- நாகரிகங்களிலும் உள்ளூர்த் தன்மையோடு உலவி வருகின்றன. உயிர் என்றால் என்ன என்கிற கேள்வி எழுப்பிய குடைச்சலால், அதை ஏழுமலைகளுக்கும் ஏழு கடல்களுக்கும் அப்பால் ஒன்றுபோலிருக்கும் ஒன்பது கிளிகளில் ஒன்றுக்குள் ஒளிந்திருப்பது என்று கற்பனை செய்திருக்கிறார்கள். தகவல் தொழில்நுட்ப வசதிகளற்ற அக்காலங்களில் இப்படியான கதைகள் கண்டம் விட்டு கண்டம் பரவிப் பல்கியது எவ்வாறு என்ற கேள்வியை பின்தொடர்ந்தால், மக்கள் தொடர்ச்சியாக தங்கள் கதைகளுடனேயே இடம் பெயர்ந்து அலைந்து திரிந்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கே வரமுடிகிறது. அந்த ஆதிமக்கள் படைத்து உலவவிட்ட தெய்வத்துக்கும் பேய்க்கும் நிகரான கதாபாத்திரமொன்றை இன்றுவரையிலும் நம்மால் படைக்கவே முடியவேயில்லை.

அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாகவும், சமூகத்தில் எழுத்தறிவு பெற்ற ஒரு அடுக்கினர் உருவானதை முன்னிட்டும் ஐரோப்பாவில் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில செய்திப்பத்திரிகைகள் வெளியாகத் தொடங்கின. கதைகளின் மீது பெருவிருப்பமும் படிப்பதற்கான ஓய்வுநேரமும் வாங்குவதற்கான வசதியும் கொண்டுள்ள மக்களை தமது வாசகர்களாக ஈர்ப்பதற்கான வியாபார உத்தியாக சிலபக்கங்களை கதைகளுக்கு ஒதுக்க முன்வந்தன இப்பத்திரிகைகள். ஆனால் புழக்கத்திலிருந்த கதைகளோ பல இரவுகள் கடந்தும் சொல்லிச் சொல்கிற வகையில் மடங்கியும் சுருண்டும் நீண்டு செல்லும் தன்மை கொண்டதாயிருந்தன. எனவே அவற்றை பத்திரிகையின் குறைந்த பக்கங்களுக்குள் அடக்க முடியவில்லை. மட்டுமல்ல, அனைவருக்கும் தெரிந்தவையாய் இருக்கும் இக்கதைகள் சொல்லப்படும் விதத்தினாலேயே சுவையேறி காலந்தாண்டி நிற்கின்றன என்பதால் அவற்றை அச்சில் அதே ஈர்ப்புடன் வெளியிடுவது பெரும் சவாலாகவும் இருந்தது. ஆகக்கடைசியில், குறைந்தளவிலான பக்கங்களுக்குள் அடங்கிவிடுகிற புதிய கதைகளைத் தேடிய பத்திரிகைகளின் வியாபாரத் தேவையே 'சிறுகதை' என்ற வடிவத்தை கண்டடைந்தது. சிறுகதையின் தோற்றம் வியாபாரம்தான். உண்மையில் அது சிறிய கதை என்றே தொடக்க நிலையில் குறிப்பிடப்பட்டது. காலப்போக்கில் இவ்வகை கதைகளில் வெளிப்பட்ட பொதுத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு அதற்கான வரையறைகள் உருவானபோது சிறுகதை என்று மாற்றமடைந்தது.

சிறுகதையானது சில குறிப்பிட்ட முன்னிபந்தனைகளை அதன் பிறப்பிலேயே கோரியது. அதாவது, யார் வேண்டுமானாலும் கதை சொல்லலாம் / கதை கேட்கலாம் என்று சொல்கதை மரபிலிருந்த ஜனநாயகத்தன்மையை அது எடுத்தயெடுப்பிலேயே ஒழித்துக்கட்டியது. எழுதுகிறவர் வாசகர் என்ற இருதரப்பாருக்குமே கல்வியறிவு அவசியம் என்றாக்கியது. கல்வியறிவு ஜனநாயகப்படுத்தப்படாத சமூகங்களில் சிறுகதையும் ஒரு குறிப்பிட்ட சிறுகுழுவுக்கானதாகத்தானே இருக்க முடியும் என்று அது கவலைப்படவில்லை. அது மிகத் தீர்மானகரமாக, பெரும்பான்மை மக்களை ஒதுக்கிவைத்துவிட்டு படித்தவர்களுக்கு மட்டுமேயோன வடிவமென்று சார்புநிலை எடுத்து தன்னை அறிவித்துக்கொண்டது.

குரல்மொழியும் உடல்மொழியும் இணைந்து ஒரு நிகழ்த்துகலையாக தொழிற்படும் வாய்மொழிக் கதைகள் காலங்காலமாக பெரும்பாலும் குழந்தைகளுக்காகவே சொல்லப்பட்டு வந்தன. அதாவது குழந்தைகளுக்கு புரியும் வகையிலும் அவர்களை ஈர்க்கும் வகையிலும் குழந்தைமை ததும்பும் அவர்களது அகவுலத்தைச் சிதைக்காமல் சொல்லப்பட்டன. ஆனால் இந்த நிலைக்கு விரோதமாக சிறுகதைகள் அனைத்தும் வயதுவந்தோர் படிப்பவையாக முன்னிறுத்தப் பெற்றன. எனவே காலத்திற்கு காலம் கதைகளை பதியனிட்டு வளர்த்தவர்களாகிய குழந்தைகளுக்குப் பிடித்தமான வகையில் சொல்லப்பட்டு வந்த கதைகளில் பொதிந்திருந்த அற்புதங்களும் வினோதங்களும் மாயாஜால தந்திரங்களும் போக்கடிக்கப்பட்டு, அறிவின்வயப்பட்ட - தர்க்கங்களால் விரித்து வைக்கப்படுகிற - வயதுவந்தோருக்கான - மொழியின் விளையாட்டாக உருவெடுத்த சிறுகதையில் சமூகம் அதுகாறும் வளர்த்தெடுத்து வைத்திருந்த கதையம்சங்கள் காணாமல் போனதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

சொல்வது கேட்பது என்ற உயிர்ப்புத்தன்மை கொண்ட வாய்மொழி மரபின் நேரடி ஊடாட்டத்திற்கு பதிலாக எழுதுகிறவருக்கும் வாசிப்பவருக்குமிடையே பத்திரிகை என்ற ஊடகம் செயல்பட்டாக வேண்டியிருந்தது. காதிருந்தால் கேட்டுக் கொள்ளலாம் என்றிருந்த நிலைமாறி காசிருந்தால் மட்டுமே வாங்கிப் படிக்கமுடியும் என்று கதையை ஒரு சரக்காகவும் மாற்றி சிறுமைப்படுத்திய பெருமை இந்த ஊடகங்களையே சாரும். இந்த ஊடகங்கள் மூலதனத்தோடு தொடர்புடையவை. மூலதனம் அதற்கேயுரிய தனித்த அரசியல் கரிசனங்களைக் கொண்டது. ஆகவே ஒரு கதையின் பிரசுரத்தகுதி மூலதனத்தாலேயே தீர்மானிக்கப்படுவதாக மாறியது. அதாவது மூலதனத்தின் மனங்கோணாதபடி எழுதப்படுகிற கதைகளே வாசகரை வந்தடையும் சாமர்த்தியம் கொண்டவையாக மாற்றப்பட்டன. ஆகவே, சிறுகதை எழுத்தாளர் (அவர் தன்னை எவ்வளவு சுதந்திரமானவராக அறிவித்துக் கொண்டிருந்த போதும்) பத்திரிகைகள் ஒதுக்குகிற பக்கங்களுக்குள் தனது கதையை மட்டுமல்லாது தன்னையும் சுருக்கி வைத்துக்கொள்ள வேண்டிய மறைமுக நெருக்கடிக்கு ஆளாக வேண்டியிருந்தது. சந்தை உருவான பிறகு சரக்கு தேவைப்படுவது இயல்புதானே? இப்படியாக எழுதப்பட்ட சிறுகதை ஒன்றை 'சற்றர்டே ஈவினிங் போஸ்ட்' என்ற பத்திரிகை 1920ஆம் வருடம் 3400 பவுண் சன்மானம் கொடுத்து கொள்முதல் செய்து வெளியிட்டது.

எழுத்தறிவு பெற்றவர்களால் எழுத்தறிவு பெற்றவரகளுக்காகவே எழுதப்படுகிற இந்த சிறுகதைகளை ஒரு சமூகத்தின் முழுமையான கண்ணாடியாகவோ இன்னும் சற்றே மேலேறிப்போய் உயர்வுநவிற்சியாக ஆன்மாவாகவோ நிறுவ முயற்சிப்பது அராஜகம்தான். நவீனகல்வியும் தொழில்நுட்ப வளர்ச்சியும் நேரச்சுருக்கமும் சேர்ந்து உருவாக்கிய சிறுகதை என்ற வடிவத்தை கைக்கொண்ட சின்னஞ்சிறிய குழு, பரந்த சமூகத்தில் காலங்காலமாக தழைத்துநிற்கும் கதை வடிவங்களை புறந்தள்ளியும், அதன் உயிர்ப்பான அம்சங்களை உள்ளிழுத்து மறைத்துக்கொண்டும் தன் இருப்பை தக்கவைத்துக் கொள்ள முயற்சித்தது. அதுவரையான கதைகள் அனைத்தையும் நாட்டுப்புறத்தார் கதை என்ற தலைப்பின்கீழ்

(17ஆம் பக்கம் பார்க்க)



-ஆதவன் தீட்சண்யா கட்டுரையிலிருந்து

# படையினரின் வீட்டுத்திட்டத்திற்கு 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு



(கிளிநொச்சி)

பாதுகாப்பு படையினர் வட மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில் படையினர் கிளிநொச்சியில் வீடுகள் இல்லாத மக்களுக்கு வீடுகளை அமைத்து வழங்கி வருகின்றனர். இதன் பிரகாரம் இத்திட்டம் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வருட திட்டத்திற்கென வடமாகாணம் 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

பாதுகாப்பு படையினர், தங்களுடைய முழு ஆதரவையும் மக்களின் தேவைகள் ஏற்படும் பிரதேசங்களை பொறுத்து பல்வேறு சமூக மேம்பாட்டு திட்டங்கள் மூலம் வழங்குகின்றனர். அத்திட்டங்களில் ஒன்றாக உள்ளடக்கி வீட்டுத்திட்டத்தின் மூலம் கிளிநொச்சியில் மீள் குடியேறிய மக்களுக்கு உதவுகின்றனர்.

பாதுகாப்பு படைகள் எந்த வித தொழிலாளர் கட்டணங்களும் இல்லாமல் வீடுகளை தாமே கட்டுகின்றனர் என்பது குறிப்பிட வேண்டிய விடயமே. கடந்த வருடம் இத்திட்டத்தின் முதலாம் கட்டம் முடிவடைந்துள்ளது. இத்திட்டத்தின் அடுத்த கட்டத்திற்கு இவ்வருடம் வட மாகாணம் 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இத்திட்டத்திற்கான காசோலையை வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கிளிநொச்சி பாதுகாப்புப்படையின் கட்டளை அதிகாரியிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி.ர. விஜயலட்சுமி, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வடக்கில் அதிகரிக்கும் தற்கொலை சிந்தனை உளவியல் ரீதியாக எதிர்கொள்வது எப்படி?



வடக்கில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் தற்கொலை மரணங்கள் காரணமாக சிவில் சமூக மட்டத்தில் பெரும் அச்ச உணர்வும் அனுதாப அலைகளும் மேற்கிளம்பியிருந்தன.

இந்த உளவியல் சார்ந்த சமூகப் பிரச்சினையை எதிர்கொள்வதற்காக கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பு இப்போது யாழ்.மண்ணில் களம் இறங்கியுள்ளது.

தற்கொலை பற்றிய செய்தி கேட்டு மனம் கலங்காதோர் எவருமில்லை. சக மனிதர் ஒருவர் தன் வாழ்க்கையைத் தானாகவே முடித்துக்கொள்வதென்பது அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் மட்டுமன்றி, அவரைத் தெரியாதவர்களுக்கும் ஆழ்ந்த அதிர்ச்சியைத் தருவதாகும். அதைவிட அதிர்ச்சியைத் தருவது யாதெனில் தற்கொலை முயற்சியில் தோல்வி அடைந்தவர்களில் ஏராளமானவர்கள் அத்தோல்வியை நினைத்துப் பின்னர் மகிழ்கின்றனர் என்ற உண்மையாகும்.

**தற்கொலைக்கு இன, மத, வர்க்க போதங்கள் இல்லை**

பலருக்கு தற்கொலை பற்றிய எண்ணங்கள் எண்ணங்களாக மட்டுமே நின்றுவிடும். அதேவேளை ஏனையோர் அதைச் செயற்படுத்த முனைகின்றனர். இதற்குக் காரணம் தமக்கு எவருமில்லை, தமது பிரச் சினைகளைத் தீர்ப்பதற்கு உதவக்கூடிய நெருக் கமான நம்பிக்கைக்குரிய ஒருவருமில்லை என்ற உணர்வுகளாகும். இவர்களுக்கு மரணம் ஒன்று தான் வழியெனத் தோற்றும்.

**வாழ்வதை நிறுத்த வேண்டும் என்ற எண்ணமே அன்றி இறப்பதற்கான விருப்பம் அல்ல**

தற்கொலை ஒரு சிக்கலான பிரச்சினை. இதற் கென தனியொரு காரணி இல்லை. தற்கொலை கள் தடுக்கப்படக்கூடியவை. பேசுதல் தரும் பேருதவி தற்கொலைக்குத் தூண்டப்படும் ஒருவர் தனது பிரச்சினைகள் சகிதம், தான் தனிமைப்பட்டிருப்பது போல் உணர்கிறார். இப்படியான மன அழுத்தம் கொண்ட ஒருவர் புரிந்துணர்வும், அக்கறையும், பிறர் உணர்வையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையும், தன் சொந்தத் தீர்ப்பை முன்வைக்காத பண்பும் கொண்ட இன்னொருவருடன் உரையாடுவதன் மூலம் தனது நிலை பற்றிய பிறிதொரு பார்வையைப் பெற்றுக் கொள்கிறார். இதனால் தற்கொலை நோக்கிய உந்துதல் குறைந்து போகிறது.

**நட்பான அரவணைப்பு**

உணர்வு ரீதியான நெருக்கடியை எதிர்கொள்ளும் ஒருவருக்கு முக்கியமாகத் தேவைப்படுவது அந்தரங்கத்தைப் பேணக்கூடிய நட்புணர்வுள்ள ஆதரவாகும். இத்தகையவரைச் செவிமடுக்க முன்வரும் ஒரு நண்பர் புத்திமதி சொல்வதையோ, கண்டனம் செலுத்துவதையோ தவிர்த்தல் வேண்டும்.பாதிக்கப்பட்டவர் தன் சூழ்நிலைக்கு முகம் கொடுக்கக் கூடிய மன உறுதியைப் பெற உதவுதல் வேண்டும்.

**தற்கொலை நாட்டமுள்ளோரிடம் காணத்தக்க அறிகுறிகள்**

தனிமைப்பட்டிருப்பதும், மற்றவர்களுடன் சம்பந்தம் கொள்ள முடியாதிருப்பதும், எப்படித் தற்கொலை செய்வது என்பது பற்றிய தெளிவான கருத்தைக் கொண்டிருத்தல், தனிமைப்பட்டுப் போன உணர்வைப் பற்றிப் பேசுதல் போன்ற பின்வரும் உணர்வுகளை வெளிப்படுத்தல் தோல்வி, பய னற்ற தன்மை, நம்பிக்கையின்மை, பாதிப்படைந்த சுயகௌரவம், தீர்வு காணப்பட முடியாத பிரச் சினைகளுக்குள் தொடர்ச்சியாக மூழ்கியிருத்தல்.

**தற்கொலைத் தடுப்பு தொடங்குவது வீட்டில்**

தற்கொலையைத் தடுப்பதென்பது, ஒவ்வொருவரது கடமையுமாகும். தற்கொலை நாட்டமுள்ளோருக்கு உதவி தேவை, அவர்களுக்குத் தேவையான உதவி அவர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யக் கூடிய நிலையில் நீங்கள் இருக்கக் கூடும். உதவி தேவைப்படும் ஒருவரை நீங்கள் இனம் காணும்போது உங்கள் உதவி ஒரு உயிர்காக்கும் உதவியாகலாம்.

எனவே கை கொடுக்கும் நண்பர்களுக்கு உங்கள் ஆதரவைத் தாருங்கள். ஒரு தன்னார்வத் தொண்டராக நீங்களும் எம்முடன் இணையலாம் என்று மேற்படி அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

தனியார் கல்விநிலையமொன்றுக்கு உதவியாளர் (Clerk) தேவை. உயர்தரம் படித்தவராகவும், யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட வதிவிடதாரியாகவும் இருத்தல் வேண்டும். ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 075 490 3095.

---

ஒரு பெண்மணியின் தலைமையின் கீழ் வீட்டில் இருந்தவாறு கேக் தயாரிப்பில் ஈடுபட ஆர்வமுள்ள மற்றும் பழக விரும்பும் 18 - 30 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகள் தேவை. நியாயமான ஊதியமும், தங்குமிட வசதியும், மூன்றுவேளை உணவும் இலவசம். A/L மற்றும் O/L படித்து முடித்துவிட்டு வீட்டில் இருப்பவர்களும் வேலை செய்யலாம். தொடர்புகளுக்கு: 077 756 3627.

---

கௌரவமான, படித்த, சிறிய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை. வீட்டில் தங்கியிருந்து வேலை செய்தல் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 077 327 6502, 021 222 2594.

---

இணுவில் பொது நூலகத்தில் நூலகர் மற்றும் நூலக உதவியாளராகப் பணியாற்றுவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 03.02.2013 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தங்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம், மானிப்பாய் வீதி, இணுவில். மேலதிக தொடர்புகளுக்கு 021 224 1930.

---

மானிப்பாயில் அமைந்துள்ள நுண்கலைக்கல்லூரிக்கு சுத்திகரிப்பும், பராமரிப்பும் செய்யக்கூடிய பெண் பணியாளர் தேவை. மானிப்பாய் பிரதேசத்திற்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. விருப்பமுடையோர் எதிர்வரும் 04.02.2013 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 6 மணிக்கிடையில் நேரில் சமுகமளிக்கவும். சமுகமளிக்கவேண்டிய முகவரி: நடேஸ்வராலயா நுண்கலைக்கல்லூரி, 278, யாழ்.வீதி (வில்லியம் மேதர் தேவாலயம் முன்பாக, மானிப்பாய் கல்லூரிக்கு அருகில்). மானிப்பாய்.

---

மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் ஊதுபத்திகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தொடர்புகளுக்கு: 077 602 3002.

---

தச்சுத்தொழிலாளி, குழாய் பொருத்துநர், இரும்பு அல்லது உலோகம் ஒட்டுபவர், மின்னியலாளர் உடன் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 077 358 1126, 077 544 3559.

---

நெல்லியடியில் உள்ள வைத்திய நிலையமொன்றுக்கு பெண் பிள்ளைகள் தேவை. தொடர்புகளுக்கு: 075 741 3875.

---

முள்ளியவளை - வித்தியானந்தக் கல்லூரியில் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள ஆங்கில மொழி விருத்திக் கற்கைநெறிக்கு வளவாளர்கள் தேவை. ஆங்கிலப்புலமையும், கற்பித்தல் அனுபவமும் கொண்டவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னராகத் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தினை செயலாளர், ஆங்கில மொழிவிருத்தி மன்றம், மு/வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். மேலதிக விபரங்களுக்கு 024 222 1442.

---

மானிப்பாயில் அமைந்துள்ள நுண்கலைக்கல்லூரிக்கு நிர்வாக பெண் உதவியாளர் (Administrative Assistant) தேவை. நுண்கலை அறிவு, நிர்வாக அனுபவம், ஆங்கில அறிவு உள்ள ஓய்வு பெற்ற அலுவலர் கல்லூரிக்கு அண்மையில் வசிப்பவர் விரும்பத்தக்கது. ஆர்வமுடையோர் சான்றிதழ்களுடன் 04.02.2013 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 6 மணிக்கிடையில் சமுகமளிக்கவும். சமுகமளிக்க வேண்டிய முகவரி: நடேஸ்வராலயா நுண்கலைக்கல்லூரி, 278, யாழ்.வீதி. (வில்லியம் மேதர் தேவாலயத்திற்கு முன்பாக, மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்) மானிப்பாய்.

# உள்ளூராட்சி அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு காரணமின்றி மீளப்பெறப்பட்டது ஏன்?

## விழிபிதுங்கிய நிலையில் உள்ளூராட்சித் திணைக்களம்

(கொழும்பு)

வடக்கின் உள்ளூராட்சி சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி மீளப்பெறப்பட்டது ஏன்? என்று புரியாமல் உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் விழிபிதுங்கிய நிலையில் உள்ளனர். வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட 560 மில்லியன் ரூபா நிதி மீளப்பெறப்பட்டுள்ளது என்றும், 2013 ஆம் ஆண்டில் உள்ளூர் வீதிகளைப் புனரமைத்தல், உள்ளூராட்சி சபைகளுக்கு புதிய கட்டடங்களை அமைத்தல் சந்தைகளை அமைத்தல், மற்றும் ஏனைய கட்டுமானங்களை மேற் கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதியே இவ்வாறு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சிடம் இருந்தே, இந்த நிதியை விலக்கிக் கொள்ளும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியே விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான நிதி விலக்கிக் கொள்ளப்படவில்லை.

வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் இந்த ஆண்டு நடத்தப்படவுள்ள நிலையிலேயே அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை பறித்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உல்லாசப் பயணத்துறைக்குப் பேரிடி சீரற்ற காலநிலைக் கோளாறு காரணம்



(கொழும்பு)


நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக உல்லாசப் பயணத்துறை மிக மோசமாகப் பாதிக்கப்படும் சூழல் தோன்றியுள்ளது. அதேவேளை நாட்டின் சில பகுதிகளில் சீரற்ற காலநிலையால் கடும்மழை, வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவ்வாறு சென்றாலும் குளங்களில் ஆறுகளில் நீராடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸ் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சில தினங்களாக மத்திய, ஊவா, வடக்கு, வட மத்தி, கிழக்கு மாகாணங்களில் பெய்துவரும் கடும்மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது. சில பகுதிகளில் வான்கதவுகள் திறக்கப்பட்டு பொதுமக்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சுற்றுலா செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு சென்றாலும் குளங்களில் நீராடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸ் தலைமையகம் கேட்டுக் கொண்டுள்ளது.

# பாடசாலைகளில் பாலியல் துஷ்பிரயோகம்; தடுத்துநிறுத்த அதிரடி நடவடிக்கை

## ஆசிரியர்கள் பலர் சிக்குவர்



(கொழும்பு)

பாடசாலைகளில் தொடரும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு காரணமானவர்கள் மீது கடும் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாண பள்ளிக்கூடங்களில் மாணவிகள் மீதான பாலியல் சம்பவங்கள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் பேரில், இதுவரை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசரா ஊழியர்கள் என 25 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கு உள்ளேயும் வெளியேயும் மாணவிகள் மீதான பாலியல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக கூறும் அவர், முறைப்பாடு பதிவு செய்யப்படாத சம்பவங்களும் இருப்பதால் நடந்த சம்பவங்களின் எண்ணிக்கை அதிகம் என்றும் கூறுகின்றார்.

தமிழ், முஸ்லிம் சமூகங்களிடமிருந்து இவ்வாறான முறைப்பாடுகள் வெளிவருவதில்லை. சிங்கள சமூகத்திடமிருந்துதான் பெரும்பாலான முறைப்பாடுகள் வந்துள்ளன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டுகிறார்.

விசாரணைகளின் முடிவில் சிலர் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள அதே வேளை, இன்னும் சிலர் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் விமலவீர திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளின் போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஒருசிலர் சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாகியுள்ளார்கள். ஆனால் சாட்சியங்கள் இல்லாத நிலையில் சிலர் நிரபராதி என விடுதலையான சம்பவங்களும் உள்ளன என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டுகிறார்.

முறைப்பாட்டாளர்களும் சாட்சிகளும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்வராமையால் பள்ளிக்கூட மாணவிகளுக்கு எதிரான பாலியல் செயற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுப்பதில் தடைகள் காணப்படுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் கட்டளைகளுக்கு அமைவாக மாணவர்கள் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றமையே இவ்வறான துஷ்பிரயோகங்கள் அதிகரிக்கக் காரணம் என்று சமூக ஆர்வலர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

சில நாடுகளைப் பின்பற்றி இலங்கையிலும் பாலியல் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்காக முன்பள்ளிகள் தொடக்கம் விழிப்புணர்ச்சி விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி விழுது அமைப்பின் தலைவி சாந்தி சச்சிதானந்தம் கூறியுள்ளார்.

# தொடரும் சீரற்ற காலநிலை இந்தவாரம் சீரடையும் சாத்தியம்

(கொழும்பு)

கிழக்கில் தொடரும் அடைமழையும், வெள்ளப் பெருக்கும் இந்தவாரம் சீரடையும் என்று கால நிலை அவதானநிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ளநீர் பெருக்கெடுப்புக் காரணமாக மட்டகளப்பு மாவட்டத்தில் 3 இலட்சத்து 28 ஆயிரத்து 189 பேர் தொடர்ந்தும் இடம்பெயர்ந்துள்ள நிலையில் உள்ளனர்.

நாட்டின் 6 மாவட்டங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த மழை வெள்ளம் காரணமாக 3 இலட்சத்து 51 ஆயிரத்து 703 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 40 இடைதங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே நிலவும் கடும் மழையுடனான காலநிலை படிப்படியாக சீரடையும் என்று கால நிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# அரசுக்கு எதிரான எதிர்ப்பு தெற்கில் முளைவிடும் சாத்தியம்

## ஐ.தே.கட்சி ஆரூடம்



(கொழும்பு)


அரசுக்கு எதிரான மக்களின் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. இதனால் முன்நோக்கி நகர்வதற்கு அரசினால் முடியாமல் உள்ளது என்று ஐக்கி தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் எமக்கு முன்னுள்ள சவால்களை ஏற்றுக் கொள்ள கட்சியின் உள்ளகம் தயாராகி வருவதாக கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கண்டி - மெனிக்கின்னவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கு எதிராக மக்களின் எதிர்ப்பு அதிகரித்து வருகின்றது. இதனால் அராசங்கத்தினால் முன்னோக்கி செல்ல முடியாத நிலையில், இந்த சவாலை ஏற்றுக்கொள்ள ஐக்கிய தேசிய கட்சி தயாராகி வருகின்றது. இந்த நிலையில் கட்சியின் உள்ளக தரப்பில் உள்ள முரண்பாடுகளைக்களைவதன் பொருட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பரமர் சங்கமம்



'சொர்க்கமே ஆனாலும் சொந்த உரைப்போலாகுமா' எண்டொரு சினிமாப் பாடலுண்டு.

இக்காலத்தில் பிரஞ்சத்தில் வாழ முடியாமல் செவ்வாய்க் கிரகத்தில் குடியேற மனிதன் ஆய்வுகளை நடத்திக் கொண்டிருக்கிறான்.

போன வருசம் டிசம்பர் மாதத்தில் பூமி அழியப்போகிறது; பாரிய விண்கல் ஒண்டு பூமியை நெருங்கி வந்து கொண்டிருக்கு; மாயன் கலண்டர் 21.12.2012டன் முடிவடைகிறது எண்டெல்லாம் கதைபரவியது.

அதையொட்டி நாசா விஞ்ஞானிகள் வேறொரு கிரகத்துக்கு பூமிவாசிகளை கொண்டு சென்று குடியேத்தப் போவதாகவும், அதற்கு இத்தனை மில்லியன் பணம் செலுத்த வேண்டுமென்றும் வதந்திகள் பரவின.

பிற்பாடு பூமியை நெருங்கி வரும் பாரிய விண்கல்லில் நாசா விஞ்ஞானிகள் இங்கிருந்து அனுப்புகின்ற விண்கலங்கள் இறங்கி எரிபொருள் நிரப்பிச்செல்வதற்கான நிலையங்கள் அமைக்க இருப்பதாகவும் சொல்லப்பட்டன.

இதுகளை எல்லாம் எங்கட மொழியில புஸ்வாணமெண்டோ. பண்டாரவெடியெண்டோதான் சொல்ல வேணும். மனிதர் வாழக் கூடியதாக நன்னீரூற்றுக்கள் காணப்பட்டால் அங்கையெல்லாம் சனம் குடியேறிவிடும்.

அப்படி வசதி இல்லாத எத்தனையோ இடங்கள் இன்னமும் பூமியில் காணப்படேக்க செவ்வாய்க்கோ வேறு கிரகங்களுக்குகோ ஏன் செல்ல வேண்டும்?

பிரபஞ்சத்தில சனத்தொகை கூடக்கூட யுத்தங்களை நடத்திச்சினம்; அப்புடியும் அடங்காமல் கொலம்பஸ் அமெரிக்காக் கண்டத்தைக் கண்டு புடிச்சாப்போல புதிசு புதிசாக் கண்டு புடிச்சுக் குடியேறிச்சினம்.

அப்புடியும் இல்லாமல் அணு ஆயுதத்தைக்கண்டு புடிச்சிருக்கினம் சனத்தை அழிக்கத்தாணை! எங்கட குடாநாட்டில அல்லைப்பிட்டி. மண்கும்பான் பிரதேசங்களிலும் இப்ப சனம் குடியேறிக்கொண்டிருக்கெல்லே!

குடிநீர் வசதி இல்லாத இன்னுமொரு இடமிருக்கு. அதுதான் சிறுத்தீவு, மண்டைதீவுக்கும் குருநகர் கடலேரிக்கும் இடையில் காணப்படும் சதுப்பு நிலப்பரப்பைக் கொண்ட தீவு.

இத்தீவில இன்னமும் குடியிருப்புத் தோன்றவில்லை. குருநகரில் இருந்து இலவசப்பிரதியாக வெளியிடப்படும் 'செவ்வானம்' 2012 மார்கழி இதழில் இந்தச் சிறுத்தீவைப் பற்றி ஆசிரியத் தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

ஏறக்குறைய நான்கு தசாப்தங்களுக்கு முன்பாக குருநகர் கலைக்கழகத்தால் சிறுத்தீவில் குடியேற்றத்துக்கான திட்டம் தீட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1969 இல் குடியேறுவதற்கான சாதகமான தரவுகள் கிடைத்ததாகவும், அங்கே அமைந்துள்ள லூர்த்து மாதா சிற்றாலய சூழலில் நன்னீரூற்று இருப்பதாக தோலகட்டி அருட்சகோதரர்களால் அடையாளப்படுத்தப்பட்டதாகவும் அந்தத்தகவல் கூறிச்செல்கிறது.

அதனிடையே இலங்கை அரசு சீனாவுக்கு உல்லாச விடுதி அமைக்க வழங்கி இருப்பதாகவும் வதந்திகள் வந்து கொண்டே இருக்குது.

எது எப்படியோ சிறுத்தீவில் குடியிருக்கமுடியுமானால் பெருகி வரும் சனத்தொகைக்கு கடுகளவேணும் அத்தீவு கைகொடுக்குமென்பதில் சந்தேக மில்லை. என்ன நான் சொல்லுறே...

4. ஆடுகின்றனர் என்பது என்ன காலம்?

.................................................................................................

5. மிக அழகாக ஆடக்கூடிய பறவை எது?

.................................................................................................

6. தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பின்வருவனவற்றுள் எவ்வெழுத்தை இட்டால் கருத்துள்ள மூன்று சொற்களைப் பெறலாம்.

| | | |
|---|---|---|
| ம | தி | த |
| ற | க | கு |
| .......... | .......... | .......... |

1. ம
2. தி
3. சி

7. இடைவெளிக்குரிய இலக்கத்தைக் காண்க.

அவன் என்றால் ................................................ 136

இவன் என்றால் ................................................ 336

எவன் என்றால் ................................................ ..............

1. 536 2. 756 3. 736

**10) தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமானதன் கீழ் கோடிடுக.**

11. கைத்துடைப்பானைப் பாவித்தல்
சவர்க்காரமிட்டுக் கைகளைக் கழுவுதல்
உபகரணங்களைச் சுத்தமாக வைத்திருத்தல் } (சமைத்தல்/விற்றல்)

12 முட்டையிடும்
ரீங்காரமிடும்
சூழலுக்கு ஏற்ப இயங்கும் } (பறவை/எலி)

13. வளரும்
வளையும்
நிழல் தரும் } (மரம்/கொடி)

14. இலங்கையில் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு வழங்கும் சான்றிதழ்
1. C F L 2. S L S 3. L E B

15. மாமரம் தொடர்பான கூற்று
1. பரந்து வளரும் 2. கனிகொடாது 3. நார்வேருடையது

**11) பின்வரும் பந்தியை வாசித்து அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

நான் அரசனானதில் பயம் ஒன்றுமில்லைப் போலிருக்கிறது. எனக்கு <u>வேண்டிய</u> உணவு உண்பதற்கும் வழியில்லை. அதையும் <u>திருட்டுத்</u> தனமாகத்தான் செய்ய வேண்டியுள்ளது. அமைச்சர்கள் <u>பார்த்துக்</u> கொண்டே இருக்கின்றனர். அவர்களுக்கும் வேறுவழியில்லை.

1. வேண்டிய :................................................ ( தேவையான, திருடிய)
2. திருட்டுத் :................................................ (விரும்பியவாறு, களவாக)
3. பார்த்துக் :................................................ (தேடிப்பார்த்தல், ஒட்டுப்பார்த்தல்)



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II

1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 32



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**01. கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

தமயந்தி தனது தந்தையாராகிய ச.கேசவனுடன் பிரயாணத்தை மேற்கொண்டாள். அவளின் தாயாராகிய இலக்குமியும் பிள்ளைகள் இருவரும் உடல்நிலை காரணமாக, வீட்டிலே தங்கிவிட்டார்கள். இவர்கள் இலக்கம் 3/2, பெரேரா லேன், வெள்ளவத்தை என்னும் இடத்திற்கு வந்து ஒரு வருடமாகின்றது. தந்தையார் ஆசிரியப் பணியில் இருந்து இரண்டு மாதம் தான் ஓய்வு பெற்றார். தாயார் தொழில் புரிந்தும் தனது பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்து வேலையை இராஜினாமா செய்துவிட்டார்.

1. தந்தையின் பெயர் :................................................
2. தாயாரின் பெயர் :................................................
3. தந்தையார் செய்த தொழில் :................................................
4. சொந்த விலாசம் :................................................
5. பிள்ளைகளின் எண்ணிக்கை :................................................

**02) கீழே தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.**

1. சாதாரண கடிதத்தை அஞ்சலில் அனுப்ப ரூபா.5.00 முத்திரை ஒட்ட வேண்டும். (...............)
2. விமானங்கள் எரிபொருளில் இயங்குவதில்லை. (...............)
3. பூக்கள் அனைத்தும் காலையில் மலர்ந்து விடும். (...............)
4. மழை வருவதற்கு முன் பல அறிகுறிகளை நாம் முதலிலேயே அறிந்துகொள்ளலாம். (...............)
5. ஓரங்க நாடகத்திற்குத் திரை மூடுவது இல்லை (...............)

**03) சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1. நீரில் கலக்காத திரவப் பொருள்.
   1. மோர் 2. வினாகிரி 3. எண்ணெய்
2. நீர் வாழ்வனவற்றுள் குட்டி ஈனும் தன்மையுள்ளது.
   1. வாளை 2. சுறா 3. கெளுத்தி
3. மஞ்சள் நிறத்துடன் நீல நிறத்தைச் சேர்த்தால் வரும் நிறம்.
   1. செந்நீலம் 2. பச்சை 3. கருநீலம்
4. தன்வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே பலன்தரும் தாவரம்
   1. கமுகு 2. வாழை 3. கத்தரி
5. நீரினால் பரவும் தாவரம்
   1. வேம்பு 2. மா 3. தென்னை

**04) சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. என்னிடம் உள்ள பணம் 84 ரூபா. இதில் 1/3 பகுதியை எனது தங்கைக்குக் கொடுத்தால் தற்போது என்னிடம் எவ்வளவு பணம் உண்டு?
(..........................................)

2. 3 லீற்றர் பாலின் விலை 66 ரூபா எனின் 5 லீற்றர் பாலின் விலை என்ன?
(..........................................)

3. 1 கிலோகிராம் சீனி விற்கும்போது வியாபாரி ஒருவருக்கு 2 ரூபா இலாபம் உண்டு. எனின் 40 ரூபா இலாபம் பெறும் அவன் விற்ற சீனி எத்தனை கிலோகிராம்?
(..........................................)

4. ஒரு சதுரக் காணியின் சுற்றளவு 48 மீற்றர் ஆகும். அக்காணியின் ஒரு பக்க நீளம் எத்தனை மீற்றர்?
(..........................................)

5. ஒரு வேலையை 5 கூலியாட்கள் மூன்று நாட்களில் செய்து முடித்தால் 1 கூலியாள் அவ்வேலையைச் செய்து முடிக்க எத்தனை நாட்கள் வேண்டும்?
(..........................................)

6. எலி வெட்டிய துணியைத் தைக்கும் முறை.
1. பொத்தல் இடை 2. இளையோடி 3. காக்காகஸ்

7. கனிப்பொருள் நிறைந்த பொருள்.
1. காரீயம் 2. இரும்பு 3. மரம்

**05) பாடசாலை போகும் மாணவரின் செயற்பாட்டு ஒழுங்கினை ஒழுங்குபடுத்தி இலக்கமிடுக.**

1. 1 உணவு உண்டான் : ☐
2. 2 பாடசாலை சென்றான் : ☐
3. 3 காலை எழுந்தான் : ☐
4. 4 கடவுளை வணங்கினான் : ☐
5. 5 கடமைகள் செய்தான் : ☐

**06) பின்வரும் வாங்கியங்களுக்குப் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக**

**தூக்குக்குண்டு, மூலைமட்டம், மட்டப்பலகை, சீவுளி, துருத்தி, பாரந்தூக்கி**

1. மரத்தைத் துப்புரவு செய்யப் பயன்படுவது. (..........................................)
2. இரும்பை உருக்கப் பயன்படுத்துவது (..........................................)
3. கப்பலில் பாரத்தைத் தூக்குவதற்கு உதவுவது. (..........................................)
4. சுவரைச் செங்குத்தாகக் கட்டுவதற்குப் பயன்படுவது. (..........................................)
5. நிலத்தை மட்டமாகத் தேய்ப்பதற்குப் பயன்படுவது. (..........................................)



**07) பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

இரும்பினால் செய்யப்பட்ட கூட்டில் நான் தனியாக இருக்கிறேன். உணவும் வேறு தேவைகளும் எனக்குத் தாராளமாகக் கிடைத்தாலும், மனதில் நிம்மதி இல்லை. என்னை நன்கு கவனித்தாலும் தனிமையில் கழிக்கும் இவ்வாழ்க்கையில் என்ன நன்மை. சில வேளைகளில் என்னை அறியாமலேயே பறந்து செல்ல முயற்சி செய்கிறேன்.

1. மேற்கூறிய பந்திக்கிணங்க கூட்டில் அடைக்கப்பட்டிருப்பது,
1. குற்றவாளி ஒருவன் 2. பறவை ஒன்று 3. நாய் ஒன்று

2. பறந்து செல்லத் தேவையானது,
1. சிறகு 2. இறகு 3. கூடு

3. பின்வருவனவற்றுள் முலையூட்டி ஒன்று.
1. கழுகு 2. பூனை 3. முதலை

4. நன்மை என்பதற்குரிய எதிர்ச்சொல்
1. நன்கு 2. நன்று 3. தீமை

5. பந்தியில் உள்ள உலோகப் பொருள்
1. இரும்பு 2. உணவு 3. நிம்மதி

**08) பின்வரும் தகவலை விளங்கிக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு ஜம்பு மரத்தில் 12 பழங்களும் அதைப்போல் இருமடங்கு பழங்கள் மாமரம் ஒன்றிலும் இருந்தன. இவை யாவற்றையும் பறித்தச் சமமான 3 பங்குகளாக்கப்பட்டன.


1. மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
..........................................
2. மொத்தம் எத்தனை பழங்கள் பறிக்கப்பட்டன?
..........................................
3. 3 பங்குகளாக்கப்பட்ட பின் ஒரு பங்கில் உள்ள பழங்களின் எண்ணிக்கை யாது?
..........................................
4. ஒரு பங்கிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
..........................................
5. ஒரு பங்கிலுள்ள ஜம்புப்பழங்களின் எண்ணிக்கை யாது?
..........................................

**09) பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

குயிலின் ஓசையினால் முழுப் பிரதேசமும் இனிமையாயிற்று. செந்நிறப் பூக்கள் பூத்துக் குலுங்கின. புதுவருட காலமாதலால் மக்கள் மரங்களில் ஊஞ்சல் கட்டி ஆடுகின்றனர். சிறியோர் முதல் பெரியோர் வரை ஊஞ்சலாட பெருவிருப்பங் கொண்டிருந்தனர். பல்வேறு பகுதிகளில் விதவிதமான ஊஞ்சல்கள் கட்டி ஆடினர்.

1. மேற்கூறிய நிகழ்ச்சி வருடத்தின் எம் மாதத்தைக் குறிக்கின்றது?
..........................................
2. பறவைகளில் மிக இனிமையான குரலையுடைய பறவை எது?
..........................................
3. மரங்களில் ஊஞ்சல் கட்டத் தேவைப்படுவது என்ன?
..........................................

# திசை மாறுகிறது தேர்தல் நாகரிகம்



(புதுடில்லி)

வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு, பட்டியலில் இடம்பெற்றுள்ள வேட்பாளர்களை பிடிக்கவில்லை என்றால், அவர்களை நிராகரிக்கும் உரிமையும் வழங்க வேண்டும் என துணை ஜனாதிபதி ஹமித் அன்சாரி கூறியுள்ளார்.

டில்லியில் நடந்த தேசிய வாக்காளர் நாள் விழாவில், அன்சாரி பேசியதாவது; கடந்த 60 ஆண்டுகளில், 15 லோக்சபா தேர்தல் களையும் 350 மாநில சட்டசபை தேர்தல்களையும் தேர்தல் ஆணையம் நடத்தியுள்ளது. வாக்களிப்பது அனைவரின் கடமை. அனைவரும் வாக்களிப்பதில்லை என்பது வருத்ததற்குரியது. வாக்குரிமையை அனைவரும் பயன்படுத்த வேண்டும். அதிக பெரும்பான்மை பெற்றவர் மட்டுமே வெற்றி பெற்ற வேட்பாளராக அறிவிக்கப்பட வேண்டும். ஏனெனில், வெற்றி பெற்றவர்களில் பலர், மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலேயே வெற்றி பெறுகின்றனர்.

தனக்கு விருப்பமான வேட்பாளரை தேர்வு செய்யும் வாக்காளர், அவரின் செயல்பாடு பிடிக்கவில்லை என்றால், அவரை நிராகரிக்கவும் வேண்டும். அதுபோல, வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களில் யாரையும் தனக்கு பிடிக்கவில்லை எனத் தெரிவிக்கும் உரிமையும் வழங்க வேண்டும். இவ்வாறு ஹமித் அன்சாரி கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய தலைமை தேர்தல் ஆணையர் வி.எஸ்.சம்பத், சமீபத்திய வாக்காளர் பட்டியலில் புதிதாக, 2.32 கோடி பேர் பெயர்களை இணைத்துள்ளனர். நாட்டில் மொத்தம் 77.78 கோடி வாக்காளர்கள் உள்ளனர் என்றார்.




# தந்தையின் கொடூரம்; பிஞ்சுப்பாலகி படுகாயம்

(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் குடிபோதைக்கு அடிமையான தந்தை ஒருவன் தமது 5 மாத பச்சிளம் பெண் குழந்தையின் காது, கன்னம், உதடு போன்ற பகுதிகளை கடித்து குதறி எடுத்துள்ள சம்பவம் நெஞ்சை திகிலடையச் செய்திருக்கிறது.

ஜெய்ப்பூர் அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்த பகதூர் சிங் என்பவன் குடிபோதைக்கு அடிமையானவன்.

சில நாட்களுக்கு முன்பு உச்சகட்ட போதையில் வீட்டுக்கு வந்த அவன் மனைவியுடன் வழக்கம்போல சண்டை போட்டுள்ளான். அப்போது மனைவி மற்றும் 3 வயது பெண் குழந்தையை அடித்து காயப்படுத்தியிருக்கிறான்.

அத்துடன் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த 5 மாத பச்சிளம் பெண்குழந்தையைத் தூக்கி அதன் கன்னம், உதடு, காது என பல இடங்களை கடித்துக் குதறி சதைத் துண்டங்களை எடுத்திருக்கிறான்.

இதனால் உயிருக்கு ஆபத்தான நிலையில் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. குடிகார தந்தையை பொலிஸார் கைது செய்து சிறையிலடைத்துள்ளனர்.

# "டெசோ" தீர்மானங்கள்; புதிய பரப்புரையில் தி.மு.க



ஐ.நா.சபையிடம் அளிக்கப்பட்ட 'டெசோ' மாநாட்டுத் தீர்மானங்களை அடுத்த கட்டமாக, ஐ.நா.வின் உறுப்பு நாடுகளிடம் அளிக்கிறது டெசோ அமைப்பு இதற்காக, அந்த அமைப்பின் உறுப்பினர்கள் டில்லியில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கு செல்கின்றனர்.

இதுகுறித்து, தி.மு.க. தலைமை வெளியிட்டுள்ள அறிக்கை ஈழத் தமிழர் வாழ்வுரிமை மற்றும் பாதுகாப்பிற்கு எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து, டெசோ மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்களை, இலங்கை அரசு செயல்படுத்த ஐ.நா.சபை வலியுறுத்த வேண்டும் என தீர்மான நகல்களை ஐ.நா.சபையிடம் கட்சியின் பொருளாளர் ஸ்டாலின் தலைமையிலான இருவர் குழு அளித்தது.

ஐ.நா.சபைக்கு, அதன் உறுப்பு நாடுகள் அழுத்தம் தர வேண்டும் என்பதற்காக டில்லியில் உள்ள 47 நாடுகளின் தூதரகங்களுக்கு சென்று, டெசோ தீர்மானங்களை அதன் உறுப்பினர்கள் அளிக்கவுள்ளனர். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், சல்மான் குர்ஷித்தையும், டெசோ குழு, இன்றும் நாளையம் சந்திக்கிறது. இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# "விஸ்வரூபம்" சர்ச்சை தொடர்கிறது

கேரளாவில் விஸ்வரூபம் படம் தொடர்ந்து திரையிடப்படும் என கேரளா சினிமா வெளியீட்டாளர்கள் சங்கத் தலைவர் வி.மோகனன் அறிவித்துள்ளார். மத்திய தணிக்கை சான்றிதழ் பெற்ற படத்தை இடையூறு இன்றி திரையிடுவதற்கு போதிய பாதுகாப்பு வழங்க கேரள பொலிஸ் முடிவு செய்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம் அமைப்புகளின் எதிர்ப்பையும் மீறி, கேரளாவின் சில இடங்களில் 'விஸ்வரூபம்' படம் திரையிடப்பட்ட தியேட்டர்களுக்கு வெளியே அந்த அமைப்புகள் ஆர்ப்பாட்டங்கள் செய்தன. எனவே, எர்ணாகுளம், இடுக்கி, பாலக்காடு மாவட்டங்களின் சில பகுதிகளில் 'விஸ்வரூபம்' படத்தின் காட்சிகள் இரத்தாகின.

இந்த நிலையில், பாலக்காட்டில் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆதரவு இளைஞர் அமைப்பு விஸ்வரூபம் படத்தை நிறுத்தினால், அனைத்து படங்களையும் நிறுத்துவோம் என அதிரடியில் இறங்கியது.

பாலக்காட்டில் உள்ள அனைத்து தியேட்டர்களிலும், அனைத்து படங்களையும் நிறுத்த சொன்னது. இதையடுத்து அனைத்து படங்களும் நிறுத்தப்பட்டன. 'விஸ்வரூபம்' திரையிடப்பட்டால்தான், மற்றைய படங்களுக்கு அனுமதி என்றது. இந்த இளைஞர் அமைப்பு. அதையடுத்து பாலக்காட்டில், மீண்டும் 'விஸ்வரூபம்' திரையிடப்பட்டது.

இதுகுறித்து, மாக்சிஸ்ட் கம்யூனில்ட் கட்சியின் கேரள மாநில செயலாளர் பினரயி விஜயன், 'படம் சரியா, தவறா என்பதை அதை பார்க்கும் ரசிகர்களே தீர்மானிக்கட்டும். அதை விடுத்து தடை செய்ய அனுமதிக்க முடியாது' என அறிவித்துள்ளார். 'விஸ்வரூபம்' படம் கேரளாவில், கேரளா சினிமா வெளியீட்டாளர்கள் சங்கம் மற்றும் கேரள அரசுக்கு சொந்தமான கேரளா அரசு திரைப்பட வளர்ச்சி கழகம் மூலம் ரிலீஸ் செய்யப்பட்டுள்ளது.

# முதல்வரின் முன்மாதிரி

திரிபுரா மாநிலத்தில். 1998 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து முதல் மந்திரியாக இருந்து வருபவர் மாணிக்சர்கார். மார்க்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் உயர் மட்டக்குழு உறுப்பினரான அவர் 3ஆவது முறையாக முதல் மந்திரியாக பொறுப்பு வகித்து வருகிறார். 64 வயதான மாணிக்சர்கார் இந்தியாவின் ஏழ்மையான முதல் மந்திரி ஆவார். குர்தா மற்றும் பைஜாமா உடையில் எப்போதுமே எளிமையாக இருப்பார்.



(12ஆம் பக்கத்தொடர்ச்சி...)

## ஓரே ஒரு ஊரிலே...

ஒதுக்கிவிட்ட சிறுகதையாளர்கள்,

உண்மையில் தம் கதைகளை நகர்ப்புறத்தார் கதை என்றோ படித்தவர்களுக்கான கதை என்றோ நேர்மையாக அழைத்துக்கொள்ளாமல், தாங்கள் எழுதுவதே ஒட்டுமொத்த சமூகத்தின் கதை என்று நிறுவிமுடித்தனர். எழுத்தறிவின் அதிகாரத்தை நிலைநிறுத்தும் இந்த நிகழ்ச்சிப்போக்கினால் பாரம்பரிய கதைகள் பாமரர்களின் கதையாக குறுக்கம் பெறுவது தவிர்க்கமுடியாததாகியது. எழுத்தாளர்கள் சமூகத்தில் ஒரு தனித்த பிரிவாகினர். காலந்தோறும் கதைகளை சொல்லிக் கொண்டிருந்தவர்கள் மக்களோடு மக்களாய் கரைந்திருக்க, எழுத்தாளர்களோ தங்களை சாமான்யர்களை விடவும் ஒரு படி மேலானவர்கள் என்று கற்பிதம் கொள்வதற்கான கோணல இங்கேதான் தொடங்கியது.

எது எப்படியாயிருப்பினும் சிறுகதை என்ற வடிவம் உலகளவில் செல்வாக்குள்ள ஒரு வடிவமாக தன்னை நிறுவிக் கொண்டுள்ளது. ஆனால் அது இன்னும் படித்தவர்களுக்கேயானது என்ற நிலையிலிருந்து கீழிறங்கி வரவில்லை, வரவும் முடியாது. எனில், நாம் திரும்பத் திரும்ப படித்தவர்களுக்கான கதைகளையேதான் எழுதிக் கொண்டிருக்கப் போகிறோமா? கல்வியறிவு பெற்றவர்களிலும் இலக்கிய ஆர்வம் கொண்டுள்ளவர்கள் எவ்வளவு பேர்? அவர்களிலும் கதைகளுக்கான வாசகர்கள் எத்தனை வீதமானவர்கள்? இந்த சொற்ப அளவிலானவர்களை பொருட்படுத்தி எழுதப்படுகிறவைகளைப் பற்றிய கரிசனம்தான் நம்மிடம் மிஞ்சியிருக்கிறதா? பரந்த வெகுமக்களுக்கான கதைகள் எங்கே? அவற்றை உருவாக்கும் முயற்சிகள்தான் என்ன?

சாதிய, பாலினத்தடைகளைத் தாண்டி ஒடுக்கப்பட்ட சாதியினரும், பெண்களும், அரவாணிகளும், இதர விளிம்பு நிலையினரும் கூட தத்தமது வாழ்வை எழுதவந்துவிட்ட நிலையில், சிறுகதை வடிவத்தை குறைசொல்ல என்ன இருக்கிறது என்ற கேள்வி எழலாம். இதே சமூக அடுக்கிலிருந்து எழுத்தறிவு பெற்ற புதிய உள்ளடுக்கினர், இதே உள்ளடுக்கினருக்காகத்தான் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதானே உண்மை. எனில் சிறுகதை என்கிற வடிவத்தை தொலைத்து தலைமுழுகிவிடலாமா? தேவையில்லை. எழுத்தறிவு பெற்றவர்களில் இலக்கிய ஆர்வமுள்ள ஒரு சிறு குழுவுக்கான வடிவமாக அது இருந்துவிட்டுப் போகட்டும். நாம் இங்கே விவாதிக்க வேண்டியது, காலனியாதிக்கம் கொண்டுவந்து சேர்த்த - வடிவத்தை கைக்கொள்வதற்காக, கதை சொல்லும் நமது நெடிய மரபையும், விதவிதமான கதை வடிவங்களையும் கைவிட்டுவிட வேண்டுமா என்பதுதான். அப்படி யாரும் அறிவித்துவிடவில்லை என்றாலும் உண்மையில் அதுதான் நடந்திருக்கிறது. அச்சில் ஏறியவை மட்டுமே கதைகள் என்ற கற்பிதத்திற்கு நாம் இரையாகியிருக்கிறோம்.

சிறுகதையை ஒரு கூடுதல் வடிவமாக உட்செரித்துக் கொண்டு, நமது பாரம்பரிய சொல்கதை மரபை மீட்டெடுக்க வேண்டியுள்ளது. கேட்பாளிகளின் வயது, பாலினம், சொல்லப்படும் இடம், காலம் போன்றவற்றை கணக்கிலெடுத்து அதற்குரிய கதைகளைக் கொண்டிருந்த அந்த மரபு இன்னும் நம் மக்களிடம் தங்கியிருக்கிறது.

எழுத்து வடிவத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ள ஒவ்வொருவருக்குள்ளும் ஒளிந்திருக்கிற கதைசொல்லியை உயிர்ப்பித்து அவர்கள் வாழ்க்கை குறித்து புனைந்துவைத்திருக்கும் கதைகளை கேட்பதற்கு நம் காதுகளை திறந்துவைக்க வேண்டும்.

அந்த மக்களிடம் சொல்வதற்கான கதைகளைப் புனைவதற்கு நமது இலக்கிய வுள்ளம் இயங்கவேண்டும். மரபை மீட்பதென்ற பெயரில் பழமைக்குள் போய் பதுங்கிக் கொள்வதற்கும், வேர்களைத் தேடி மண்ணுக்கடியில் பாய்வதற்குமுள்ள வேறுபாட்டை உணரத்தொடங்குகிற எவருக்கும் இது சாத்தியமே.

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

## துயர்களில்...

இறுதியாக வாழ்வை அர்த்தப்படுத்துவது எப்படி என்ற இடத்தில் புத்தகம் நிறைவுறுகிறது. இதற்கு விடையாக அவர் அளிப்பது முழு வாழ்க்கைக்கும் செல்லுபடியாகக் கூடிய ஒரு இலக்கை உருவாக்கிக் கொள்ளுதல். அது சமுதாயம் உருவாக்கி அளித்த இலக்காக இல்லாமல் ஒவ்வொருவரும் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்ளும் இலக்காக இருக்க வேண்டும். மேலும் அது ஒருவருடைய திறமையிலிருந்தும், தனித்தன்மையில் இருந்தும் உருவாகி வருவதாக இருக்க வேண்டுமே அன்றி பணம், பதவி, சமூக அந்தஸ்துகளைக் குறியாகக் கொண்டு உருவானதாக இருக்கக் கூடாது. தன் சுயத்திற்கு உண்மையான செயல்களைச் செய்யும்போது மட்டுமே கவனமும் அர்ப்பணிப்பும் கூடி பிரவாக நிலை சாத்தியமாகிறது. இப்படிப்பட்ட அன்றாடச் செயல்கள் வாழ்க்கைக்கான மொத்த இலக்கை நோக்கிய நகர்வாக இருக்கும்போது நாட்கள் பொருள் படுகின்றன.

வாழ்க்கை பிரச்சினைகளுக்கான மொத்தத் தீர்வாக, செயலையும் அதன் மூலமாக வரும் மகிழ்ச்சியையும் மட்டுமே முன்னிறுத்துவது ஒரு வகையில் எளிமைப் படுத்துவதாக தோன்றினாலும், மிஹாயின் இந்த கோணம் நிராகரிக்க கூடியது அல்ல. பல வருட ஆராய்ச்சியின் முடிவுகளை சாமானியனும் படிக்கும் வகையில் எழுதப்பட்ட நல்ல புத்தகம்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தின்ன நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரம்



அமெரிக்காவில் சமீபகாலமாக துப்பாக்கி சூடு சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் லூசியானா மாகாணத்தில் நேற்று முன்தினம் மீண்டும் துப்பாக்கிச் சூடு நடந்தது.

அதில் மர்ம நபர் சுட்டதில் பொலிஸ் அதிகாரி ஒருவர் பலியானார். மேலும், 2 மாவட்ட அதிகாரிகள் காயம் அடைந்தனர். அவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தவர் லூசியானாவில் உள்ள சிட்டிமச்சா மலைப் பகுதியில் பொலிஸ் அதிகாரியாக இருந்தார்.


நடமாடும் வீடு போன்ற வாகனத்தில் ரோந்து சுற்றி வந்த அவரை வில்பெர்ட் திபோடியஸ் (வயது - 48) என்பவன் சுட்டுக் கொன்றதுடன், அந்த நடமாடும் வீட்டுக்கு தீயும் வைத்தான்.

பொலிஸ் அதிகாரியை சுட்டுக்கொன்ற வில்பெர்ட் கைது செய்யப்பட்டான். கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரி மற்றும் காயம் அடைந்தவர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை. காயம் அடைந்தவர்களின் நிலைமை மோசமாக உள்ளதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவின் இரும்புக்கரம்; மசியுமா முஸ்லிம் தீவிரவாதம்

(மும்பை)

மும்பை பயங்கரவாதத் தாக்குதல் சதியில் ஈடுபட்ட பாகிஸ்தான் பயங்கரவாதி ஹெட்லிக்கு அமெரிக்க நீதிமன்றம் 35 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது. எனினும், அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படாததற்கு இந்தியா அதிருப்தி தெரிவித்துள்ளது. ஹெட்லியை நாடுகடத்தி இந்தியாவுக்கு அனுப்புமாறு கோருவோம் என்றும் கூறியுள்ளது. இந்தியாவின் அதிருப்தி குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலாண்டிடம் செய்தியாளர்கள்




கேட்டதற்கு அவர் கூறியதாவது,

இவ்வழக்கில் நீதி வழங்கப்படும் என்று நாங்கள் உறுதி அளித்திருந்தோம். அதன்படி, நீதி வழங்கப்பட்டுள்ளது. மும்பை பயங்கரவாதத் தாக்குதலில் முக்கிய சதிகாரரான ஹெட்லி, அமெரிக்காவில் நீதியின் முன் நிறுத்தப்பட்டுள்ளார். 6 அமெரிக்கர்கள் உள்பட 166 பேரைக் கொன்ற இழிவான செயலுக்காக அவருக்கு 35 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின்போது அவர் பயங்கரவாதத்துக்கு எதிரான நமது முயற்சிகளுக்கு மிகவும பலனளிக்கக் கூடிய, மதிப்பு வாய்ந்த தகவல்களை வழங்கினார்.

அவற்றில், ராணாவுக்கு எதிராக அவர் அளித்த வாக்குமூலம், குற்றம் சாட்டப்பட்ட பயங்கரவாதி இலியாஸ் காஷ்மீரி மற்றும் அவரது அமைப்பு குறித்த தகவல்கள் ஆகியவை அடங்கும். மேலும், இந்தியச் சட்ட அமுலாக்கத் துறை எழுப்பிய கேள்விகளுக்கும் ஹெட்லி பதிலளித்துள்ளார். அவரை நாடு கடத்தி தங்களிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோருவது பற்றிக் கேட்கிறீர்கள். ஹெட்லி தனது தண்டனையை அமெரிக்காவிலேயே அனுபவிப்பார் என்றார் நுலாண்ட்.

# அக்னி ஏவுகணை; அஞ்சுகிறது சீனா



இந்தியாவின் 64 ஆவது குடியரசு தின விழாவில் இடம் பெற்ற அக்னி - 5 ஏவுகணை குறித்து சீன பத்திரிகைகள் முக்கியத்துவம் தந்து செய்திகள் வெளியிட்டுள்ளன.

நாட்டின் 64 ஆவது குடியரசு தின விழா நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு குடியரசு தின விழாவின் போதும் வெளிநாட்டை சேர்ந்த தலைவர் ஒருவரை சிறப்பு விருந்தினராக அழைத்து கௌரவிக்கப்படுவர். மேலும் நாட்டின் இராணுவ பலத்தை பறைசாற்றும் வகையில் முப்படைகளின் அணிவகுப்பும் நடைபெறும். இந்த அணிவகுப்பு சுமார் 100 நிமிடங்கள் அதாவது சுமார் ஒன்றரை மணி நேரம் வரையில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்தாண்டு நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் சுமார் 6 ஆயிரம் கி.மீ தூரம் வரை சென்று எதிரிகளின் இலக்கை துல்லியமாக தாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டு இராணுவத்தில் சேர்க்கப்பட்ட அக்னி - 5 ஏவுகணை இடம்பெற்றிருந்தது.

கடந்த சில ஆண்டுகளாக எல்லைப்பகுதியில் அமைந்துள்ள பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் சாலை வசதியை அமைத்தும் அருணாசல பிரதேச மாநிலத்திற்கும் உரிமை கொண்டாடி வரும் சீனா மறைமுகமாக இந்தியாவுடன் மோதல் போக்கை கையாண்டு வருகிறது. இந்நிலையில் குடியரசு தின விழாவில் இடம் பெற்ற அக்னி ஏவுகணை குறித்து அந்நாட்டின் இணையத் தளத்தில் மிக பரபரப்பான செய்தியாக வெளியிட்டுள்ளது.

நீண்ட தொலைவு சென்று தாக்கும் வகையில் ஏவுகணைகளை தயாரித்து வைத்துள்ள வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் வரிசையில் இந்தியா சேர்ந்துள்ளதாக அந்த இணைய தளத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு சீன பாதுகாப்புத்துறை அமைச்சர் லியான் குவாங்லி இந்திய பயணத்தை தொடர்ந்து வரும் ஆண்டுகளில் இருநாட்டு இராணுவ பிரிவின் மூலம் கூட்டு பயிற்சி மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# துருக்கியின் கனவு

(அங்காரா)

உலகின் மிகப் பெரிய விமான நிலையத்தை, இஸ்தான்புல் நகரில், 49 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் அமைக்க, துருக்கி அரசு திட்டமிட்டுள்ளது. துருக்கி நாட்டின் போக்குவரத்து துறை அமைச்சர் பினாலி எல்திரிம் இதுகுறித்து கூறியதாவது,

துருக்கி பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது. நாட்டின் மிக முக்கிய வியாபார பங்களிப்பு, மத்திய தரைக்கடல் நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் அதிகரித்து வருகிறது.

இதை அடுத்து, உலகின் மிகப் பெரிய விமான நிலையத்தை, இஸ்தான்புல்லில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, 49 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்படும். இதற்காக சர்வதேச 'டெண்டர்' விடும் பணிகள் நடக்கிறது.

இதற்கான பணிகள், 25 ஆண்டுகளில், நான்கு கட்டங்களாக முடிக்கப்படும். முதல் கட்டப்பணிகள் அடுத்த, மூன்று அல்லது நான்காண்டுகளில் முடிக்கப்படும்.

முதல் கட்டப் பணிகள் முடிந்ததும், விமான நிலையத்தில், ஆண்டுதோறும், 9 கோடி பயணிகளும் விமான நிலையப் பணிகள் அனைத்தும் முடிந்த ,பிறகு, ஆண்டுக்கு, 15 கோடி பயணிகளும் வந்து செல்ல முடியும். இவ்வாறு, அமைச்சர் பினாலி எல்திரிம் கூறினார்.

# ஒன்டோரியா லிபரல் கட்சிக்கு புதிய தலைவர் யார்?




கனடாவின் ஒன்டோரியா லிபரல் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் கத்லீன் வைன் என்ற பெண் அதிகப்படியான வாக்குகளால் முன்னணியில் உள்ளார்.

முதல் இருசுற்றுகளிலும் இவர் பின்தங்கியிருந்தார். முதலாவது சுற்றில் சான்றா ப்ரிலொ என்பவர் 02 வாக்குகளால் முன்னணியில் இருந்தார். இவர் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை 599. இவருக்கு அடுத்தபடியாக கத்லீன் வைன் 597 வாக்குகளைப் பெற்று சான்றாவுக்கு மிக நெருக்கமாக இருந்தார்.

இரண்டாவது சுற்றில் சான்றா 817 வாக்குகளையும், வைன் 750 வாக்குகளையும் பெற்றிருந்தனர். எனினும் மூன்றாவது சுற்றில் ஏனைய வேட்பாளர்கள் அனைவரும் விலகிவிட, இவர்கள் இருவருக்கும் இடையில் கடும் நேரடிப் போட்டி இருந்தது. இருந்த போதிலும், கத்லீன் வைன் 1150 வாக்குகளைப் பெற்று முதலாவதாக வந்தார். அவரை எதிர்த்து நின்ற சான்றா பெப்ரிலொ 866 வாக்குகளையே பெற்றார். லிபரல் கட்சியின் தலைவராகும் வைன் முன்னாள் கல்வி அமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது.


# ஆப்கானில் தற்கொலைத்தாக்குதல்; 10 பொலிஸார் ஸ்தலத்தில் பலி

வடக்கு ஆப்கானிஸ்தானில் தற்கொலைப் படை தாக்குதலில் 10 பொலிஸார் கொல்லப்பட்டனர். வடக்கு ஆப்கானிஸ்தானின் குந்துஸ் நகரின் வடக்குப் பகுதியில் நேற்று மாலை 5 மணி அளவில் தற்கொலைப் படை தீவிரவாதி ஒருவன் மோட்டார் சைக்கிளில் வந்து அங்கு கூட்டமாக நின்று கொண்டிருந்த பொலிஸர் அருகே சென்று வெடிகுண்டை வெடிக்கச் செய்தான்.



இந்த தாக்குதலில் போக்குவரத்துதுறை தலைமை அதிகாரி, தீவிரவாத எதிர்ப்பு படை தலைவர் உள்பட 10 பொலிஸார் பலியாகினர். மேலும் 5 பொலிஸார் மற்றும் பொது மக்கள் 4 பேர் காயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆனால் இப்பகுதியில் தலிபான் உள்ளிட்ட அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. நேற்று முன்தினம் தான் கபிசா பகுதியில் தாலிபான் தற்கொலைப்படை தீவரிவாதி ஒருவன் காரில் சென்று நேட்டோ படையினரைத் தாக்கியதில் பொது மக்கள் 5 பேர் பலியாகினர், 15 பேர் காயம் அடைந்தனர்.

# பிறருக்காக தம்மை அர்ப்பணிப்பவர்கள் சமூகத்தில் மிகச்சிலரே வாழ்கின்றனர்



(வவுனியா)

பிறருக்காக தம்மை அர்ப்பணித்து மற்றவர்களும் வாழ வேண்டும் என்ற மன எண்ணங்களுடன் சமூகத்தில் வாழ்ந்தவர்களில் ஒருவராக அமரர் பொன் நாகமணி விளங்குகிறார் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு, வளர்மதி சனசமூக நிலையத்தின் முதியோர் கௌரவிப்பும், நிறுவுனர் அமரர் பொன நாகமணியின் 16ஆவது ஞாபகார்த்த தினமும் கடந்த சனிக்கிழமை சனசமூக நிலையத் தலைவர் மதியழகன் தலைமையில் நடைபெற்ற போது நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பிறருக்காக தம்மை அர்ப்பணித்து எம்மைப் போல் மற்றவர்களும் வாழவேண்டும் என்ற மன எண்ணங்களுடன் சமூகத்தில் வாழ்பவர்கள் மிகச் சிலரே. அவ்வாறானவர்களில் ஒருவராக நிறுவுனர் அமரர் பொன் நாகமணி விளங்குகிறார்.

இவ்வாறுதான் கௌரவ அமைச்சர் பிறர்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்து வாழும் உன்னத மனிதர். தமிழ் மக்களின் சுபீட்சமான நல்வாழ்வுக்காகத் தான் நினைத்ததை சாதிக்கும் வல்லமை கொண்டவர்.

சமூகத்தில் தற்போது முதியோருக்கான கௌரவம் எந்தளவிற்கு வழங்கப்படுகின்றது என்பது கேள்விக்குரியது. இச் சனசமூக நிலையத்தினால் நடாத்தப்படும் முதியோர்களிற்கு மதிப்பளிக்கும் வகையிலான செயற்பாடுகள் பாராட்டிற்குரியதொரு விடயம். இவ்வாறான முன்னுதாரணமான செயற்பாடுகளை ஏனையோரும் பின்பற்ற முடியும்.

இப்பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு அமைய இவ்வாண்டுக்கான எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதிஒதுக்கீட்டில் இருந்து தடகள நிகழ்வுகளிற்கான மைதானத்தை புனரமைப்புச் செயவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் முதியோர்களை பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன், அன்பளிப்புப் பொருட்களையும் வழங்கி வைததார்.

இந்நிகழ்வில், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி, கிராம அலுவலர் வாமதேவன், சனசமூக நிலைய ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, மற்றும் பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## பதற்ற...

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தம் நிறைவுக்கு வந்து இன்று அமைதிச்சூழல் நிலவுகின்ற நிலையில் அதனைக் குழப்பும் வகையிலும், மக்களுக்கு எதிர்காலம் தொடர்பில்ான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் வகையிலும் குறுகிய சுயலாப அரசியல் நலன்களுக்காகவும், பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

கடந்த கால அழிவுகளுக்கு தவறான அரசியல் தலைமைகளின் வழிநடத்தல்களே காரணம். எமது பிரச்சினைகளுக்கு நாமே உரிய தீர்வைக் காண வேண்டும். சுயலாப அரசியல் வாதி களின் தூண்டுதல்களுக்கும், வழிநடத்தல்களுக்கும் ஒரு போதும் எடுபடவேண்டாம்.

அத்துடன் அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் தெளிவுபடுத்தியதுடன், பத்திரிகைகளில் வெளியாகியிருந்த உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஆதாரப்படுத்திய அமைச்சர் அவை தொடர்பிலான உண்மைத் தகவல்களையும் தெரியப்படுத்தினார். இதன் போது ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) உடனிருந்தார்.

## அரசின்...

நிலைநாட்ட வேண்டுமாயின் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான விவகாரம், யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான சர்வதேச குற்றச்சாட்டுக்களை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 19 ஆம் அமர்வுகளின் பின்னர் நாடு பின்நோக்கி நகர்ந்து செல்வதாகத் தெரிவித்துள்ளார். தற்போதைய ஆட்சியாளர்கள் சர்வாதிகாரப் போக்கில் நாட்டை ஆட்சி செய்ய முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இந்த நாட்டில் மிகச் சிறந்த தலைவராக மாறுவதற்கு சந்தர்ப்பம் காணப்படுவதாகவும், துரதிஷ்டவசமாக அவர் றொபேர்ட் முகாபேயை முன்மாதிரியாகக் கொண்டு செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## யுத்தத்திற்குப்...

படுகின்றபோதும் இங்கு யுத்தம் நிறைவடையவில்லை. ஏனெனில் இனங்களுக்கிடையே இன்னமும் சுமூகநிலையை ஏற்படுத்தத் தவறியதினாலேயே இவ்வாறான நிலை உள்ளது என அமெரிக்க இராஜதந்திரிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்துடன் அரசு முரண்பட்டுக் கொண்டிருப்பது ஆரோக்கியமான விடயமல்ல, ஜனநாயக ரீதியில் வட மாகாணத் தேர்தல் இன்னமும் நடத்தப்படவில்லை. மீள்குடியேற்றம் முற்றுமுழுதாக இடம் பெறவில்லை. காணாமற்போனவர்களது பிரச்சினைகள் உள்ளது. யுத்தத்தின் போது பெருமளவு மக்கள் உயிரிழந்திருக்கின்றனர். அது குறித்துச் சரியான தகவலும் இல்லை.

வீதி அபிவிருத்தி, உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டம் என்பன தொடர்ந்து அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் அதன் வேகம் போதுமானதாக இருக்கவில்லை. மேலும் மூன்று தசாப்தங்களாக நீடித்த யுத்தகால சூழ்நிலையின் பின்னர் இராணுவக் குறைப்பு என்பது கூறும்படியாக இல்லை. வட பகுதியில் இராணுவக் கட்டுமானங்கள் தொடர்கிறது.

மேலும் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் கேள்விக் குறியாகவே உள்ளது. பத்திரிகையாளர்களும் தாக்குதல் களுக்குள்ளாகின்றனர் என அமெரிக்க இராஜதந்திரிகளிடம் தெரிவித்ததாகவும் ஆயர் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்தக் குழுவில் அங்கம் வகித்த பிரதிநிதிகளில் ஒருவர் தான் ஐந்து மாதங்களுக்கு முன்னர் வந்திருந்ததாகவும் அதன் பின்னர் தற்போது உள்ள நிலையைப் பார்க்கும் போது அரசு சில விடயங்களில் இறுக்கமான நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது போன்று தென்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய அரசியல் அமைப்பை ஒத்த தீர்வு ஒன்றைப் பெற்றுத்தர அமெரிக்காவை, அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறும் யாழ். ஆயர் அமெரிக்க இராஜதந்திரிகளைக் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த இராஜதந்திரிகள் உடனடியாக இந்த விடயத்தில் அமெரிக்கா நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் பதிலளித்தார். முன்னதாக நேற்று முற்பகல் பலாலி விமான நிலையம் ஊடாக யாழ். வந்த அமெரிக்க இராஜதந்திரிகள் குழுவினர் கடற்படை அதிகாரிகளுடன் சந்திப்பொன்றையும் நடத்தியதுடன் நான்காம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள அமெரிக்கன் கோணருக்கும் விஜயம் செய்தனர். (பா)

# மன்னார் செல்லும் பேருந்தில் பணப்பையைத் தவறவிட்ட பெண்

பூநகரியில் இருந்து மன்னார் செல்லும் பேருந்தில் பெண்ணொருவர் தனது பணப்பையைத் தவறவிட்ட சம்பவம் ஒன்று கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

முழங்காவில் வைத்தியசாலையில் சமையல் வேலை செய்யும் நாகபடுவானைச் சேர்ந்த ருக்குமணி என்ற பெண் மணியே இவ்வாறு தனது பணத்துடன் கூடிய கைப்பையைத் தவறவிட்டுள்ளார். NPGE-9912 என்ற இலக்கத்தையுடைய றுசாத் ரவல்ஸ் என்ற பேருந்திலேயே தனது பணப்பையைத் தவறவிட்டுள்ளார். இதனைக் கண்டெடுத்தவர்கள் அதை முழங்காவில் வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (09)

# இந்திய மீனவர் அத்துமீறல் கண்டித்து நடைபவனி ஆரம்பம்



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் மீன்வளம் அழிக்கப்படுவதைக் கண்டித்து போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி நேற்றுக் காலை 11.45 மணியளவில் முள்ளிக்குளம் கடற்கரையில் ஆரம்பமானது.

மன்னார், முள்ளிக்குளத்தில் நேற்று ஆரம்பமான குறித்த பேரணி முல்லைத்தீவு வரை இடம்பெறும் என அவ்வமைப்பின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

குறித்த நடைபவனியின் போது முள்ளிக்குளம் மக்கள் முழு ஆதரவை வழங்கினர். இதேவேளை அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு, தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஆதரவு வழங்கினர்.

## சபாநாயகர்...

பணிப்புரை விடுத்தார். இருந்தும் இதுவரை பாதுகாப்பு வழங்கப்படவில்லை. டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி ஐந்து வருடங்களாக எனக்கிருந்த பொலிஸ் பாதுகாப்பை நீக்கினார்கள். இலங்கையில் உள்ள எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு உள்ளது. இது சம்பந்தமாக நான் நாடாளுமன்ற சபாநாயகரிடம் எழுத்து மூலமாக டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி அறிவித்தேன். இன்றுவரை அதற்கு எந்தப் பதிலும் இல்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.

## ஆட்கடத்தல்...

குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இதேவேளை, 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 492 இலங்கை சட்டவிரோத குடியேற்றவாசிகளுடன் எம்.வீ சன் சீ என்ற கப்பல் கனடாவைச் சென்றடைந்தது. எம்,வீ சன் சீ என்ற கப்பலின் ஊடாக ஆட்கடத்தலில் ஈடுபட்டதாக ஆறுபேர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளதுடன், அந்த வழக்கு மீதான விசாரணைகள், கனடாவில் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இராணுவ...

அரசாங்கம் எடுத்திருக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக இலங்கை வந்துள்ள மூன்று உயர் அதிகாரிகள் அடங்கிய அமெரிக்க தூதுக்குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதுகள் நேற்றுமுன்தினம் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் போதே அமெரிக்கப் பிரதிநிகள் மேற்கண்டவாறு தெரிவித்ததாக சுமந்திரன் பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்ட எந்தவொரு விடயத்தையும் இலங்கை நிறைவேற்றவில்லை என்பது குறித்து நாம் அமெரிக்க குழுவிடம் விபரித்ததாக கூறிய சுமந்திரன், இலங்கை இராணுவத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் பொதுமக்கள் எவரும் காணாமல் போகவில்லை என்று கூறப்பட்டிருப்பது குறித்து அமெரிக்க தூதுக்குழுவினர் மிகுந்த விசனம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கை நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பல விடயங்களைக் கூட இலங்கை நிறைவேற்றவில்லை என்றும் தாம் அமெரிக்க குழுவுக்கு விளக்கியதாகவும் அவர் கூறினார்.

# யாழ்.புறப்படவிருந்த 25 பேருந்துகள்

# வெள்ளவத்தையில் திடீரென தடுப்பு

## பயணிகள் திண்டாட்டம்

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே, வெள்ளவத்தைப் பகுதியிலிருந்து போக்குவரத்தில் ஈடுபடும் 25 இற்கும் மேற்பட்ட தனியார் பயணிகள் பேருந்துகள் நேற்று முன்தினம் மாலை வெள்ளவத்தை பொலிஸாரால் தடுக்கப்பட்டு அனைத்து பேருந்துகளும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டதால் நூற்றுக்கணக்கான பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தூண்டுதலின் பேரிலேயே வெள்ளவத்தைப் பொலிஸார் இந்தச் செயலில் ஈடுபட்டதாக தனியார் பயணிகள் பேருந்துகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பேருந்து உரிமையாளர்கள் சார்பில் ஈஸ்வரன் ட்ரான்ஸ்போர்ட் உரிமையாளர் தியாகராசா துவாரகேஸ்வரன் கூறுகையில் கொழும்பு-யாழ். பேருந்து போக்குவரத்துக்கான பாதை அனுமதிப்பத்திரத்திற்கான (றூட் பெமிற்) மூன்று மாத கட்டணத்தை ஒரே தடவையில் கட்டுமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கூறுகிறது. மூன்று மாதத்திற்கும் ஒரே தடவையாக 2இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவை கட்ட வேண்டும். இது சாத்தியப்படாதது.

ஒவ்வொரு மாதமும் இதற்கான கட்டணத்தை (93, 255 ரூபா) கட்டுவதாகக் கோரியிருந்தோம். ஆனால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதற்கு மறுத்து விட்டது. இதையடுத்தே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அண்மையில் யாழ்-கொழும்பு தனியார் பேருந்து உரிமையாளர்கள் சந்திப்பொன்றை நடத்தினர். இதில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.


மூன்று மாதம் ஒட்டு மொத்தமாக பெமிற் கட்டணத்தைக் கட்டுவதற்குப் பதிலாக ஒவ்வொரு மாதமும் கட்டணத்தைக் கட்டுவதற்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார். இதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் இணங்கியிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை வெள்ளவத்தைப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு புறப்படத் தயாராயிருந்த அனைத்துப் பேருந்துகளையும் வெள்ளவத்தை பொலிஸார் தடுத்து நிறுத்தி அவற்றை வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

அவற்றின் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் உரிமையாளர்களை அழைத்து அவர்கள் மீது முறைப்பாடுகளை பதிவு செய்த பின் அனைவரையும் பொலிஸ் பிணையில் விடுவித்ததுடன், அழைக்கும் நாளில் நீதிமன்றில் ஆஜராக வேண்டுமெனவும் தெரிவித்ததுடன், பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று தடுத்து வைத்த அனைத்து பேருந்துகளையும் விடுவித்தனர்.பல மணிநேரத் தாமத்தின் பின்னரே யாழ்ப்பாணத்திற்கான பயணத்தை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை 25 பேருந்து உரிமையாளர்களுக்கும் இன்று நீதிமன்றில் வழக்கு நடைபெறவுள்ளது.

# வெடிக்காத நிலையிலிருந்த இரண்டு எறிகணைகள் மீட்பு.



(சாவகச்சேரி)

வெடிக்காத நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட 2 எறிகணைகளும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய விஞ்ஞான ஆய்வு கூட கட்டட அமைப்புப் பணிகளின் போது அத்திபாரம் வெட்டிய தொழிலாளர்களால் மேற்படி இரண்டு எறிகணைகளும் மண்ணில் புதையுண்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது. இது பற்றி இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட தகவலினை அடுத்து படையினரால் அபாயக்குறி இடப்பட்ட நிலையிலிருந்த இவ்எறிகணைகள் இரண்டும் நேற்று நண்பகல் கண்ணிவெடியகற்றும் இராணுவப்பிரிவினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்வதற்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது. இவ்வாறான எறிகணைகள் மேலும் இப்பகுதியில் புதையுண்டு காணப்படலாம் என்ற அச்சம் நிலவுகின்றது. கட்டடத் தொழிலாளர்களும் மாணவர்களும் மிக அவதானத்துடனும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்றும் இராணுவத்தினரால் கூறப்பட்டுள்ளது. (இ)

# கண்ணிவெடியில் பலியான இளைஞனின் சடலம் மீட்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் நேற்று முன்தினம் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்த இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10 மணிக்கு மருதங்கேணி இராணுவத்தினரால் இச்சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. பருத்தித்துறை பதில் நீதவான் எஸ். பாலசுப்பிரமணியம் சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனை மேற்கொண்டபின் உறவினரிடம் அதனைக் கையளிக்குமாறும் சடலத்தைப் புதைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை இந்தச் சம்பவத்துடன் தலைமறைவாகியுள்ள மற்றைய சந்தேக நபரைத் தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர். த. சிறீகாந்த் என்பவரே இவ்வாறு தலைமறைவாகியுள்ளவரெனத் தெரிவிக்கப்படுகிறது. (116)

# மாணவியின் கை அகற்றல் மருத்துவர் கவனயீனமே காரணம்

வீட்டு படிக்கட்டில் தடுக்கி விழுந்து கை முறிவு ஏற்பட்டு கொழும்பு சட்டக்கல்லூரி மாணவிக்கு கை அகற்றப்பட்டமை மாத்தறை பொது வைத்தியசாலை வைத்தியர்களின் கவனயீனமே காரணம் என முதற்கட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீட இறுதி ஆண்டில் கல்வி பயிலும் அஞ்சலா பிரியதர்ஷினி (Achala Priyadarshinie) என்ற குறித்த மாணவி தடுக்கி விழுந்து கை முறிவு ஏற்பட்ட நிலையில் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவரது



கை வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வைத்தியர்கள் உரிய சிகிச்சை அளிக்காத காரணத்தினாலேயே மாணவிக்கு கை அகற்றப்பட்டுள்ளதாகவும் உரிய விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும் மாணவியின் பெற்றோர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில், இது குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு விசேட குழு ஒன்றை சுகாதார அமைச்சு அமைத்தது. மாத்தறை வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக மாணவி தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை என அக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட மாணவிக்கு சிகிச்சை வழங்கிய வைத்தியர்களுக்கு அவரது கையை அகற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என தீர்மானித்ததாக அவ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மாணவியை பார்ப்பதற்காக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சென்று,மாணவிக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் குறித்த சகல விடயங்களையும் கேட்டறிந்துள்ளார்.

# பேஸ்புக் தொடர்பான முறைப்பாடுகள் அதிகம்

இணைய பாவனை மற்றும் அதனோடு இணைந்ததாக 1,150 முறைப்பாடுகள் கடந்த வருடத்தில் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை கணனி பாதுகாப்பு அவசர அழைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவற்றில் அதிகமான முறைப்பாடுகள் பேஸ்புக் தொடர்பானவை என அப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இணையத்தளங்கள் குறித்த முறைப்பாடுகளும் கணிசமான அளவு கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை கணனி பாதுகாப்பு அவசர அழைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இணையத்தளங்களிற்குள் அத்துமீறி தகவல்களை மாற்றியமைத்தல் குறித்த முறைப்பாடுகளும் இவற்றில் அடங்கும் என இலங்கை கணனி பாதுகாப்பு அவசர அழைப்புப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# எரிபொருள் மானியம் வழங்காவிடின் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தம்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை

வருடாந்த பேருந்து கட்டண மீளாய்வின் போது வெளியிடப்படும் சதவீதத்திற்கு அமைய தமக்கு டீசல் மானியம் வழங்கப்பட வேண்டும் என்று தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கோரியுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி இந்த வருடத்திற்கான கட்டண சீர்திருத்தங்கள் இடம்பெறவுள்ளன. எரிபொருள் மானியத்தை பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நாடளாவிய ரீதியாக வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன எச்சரித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் மாதம் கட்டாயமாக பஸ் கட்டண மீளாய்வு இடம்பெற வேண்டும் என்று அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வரும் பேருந்து கட்டண தேசிய கொள்கைக்கு அமைய இந்த வருடம் பெப்ரவரி 14 ஆம் திகதி பேருந்து கட்டண மீளாய்வு இடம்பெற வேண்டும்.

இது தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, இந்த முறை கட்டண மீளாய்வு தொடர்பில் இதுவரை எந்தவித இறுதித் தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்று அதன் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்தார்.

# விமானம் மூலம் பி.ரி.ஐ. பக்ரீரியாவை விசிறுவதற்கு அனுமதி கோரல்

(கொழும்பு)

பி.ரி.ஐ பகரீரியாவை விமானத்தின் மூலம் விசுறுவதற்கான அனுமதியை வழங்குமாறு கோரி அமைச்சரவையில் மனுவொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மனு எதிர்வரும் வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

டெங்கு நுளம்பு பரவும் பகுதிகளுக்கு விமானத்தின் மூலம் பி.ரி.ஐ பக்ரீரியாவை விசுறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்குத் தேவையான பி.ரி.ஐ.பக்ரீரியா கியூபாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

# 610 இராணுவத்தினர் ஹெய்டி பயணம்

ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படையில் இணைந்து பணியாற்றுவதற்காக இராணுவத்தைச் சேர்ந்த 610 பேர். அடுத்த மாதம் ஹெய்டிக்கு பயணமாகவுள்ளனர்.

சுமார் 6 மாத காலங்கள் ஹெய்டியில் பணியாற்றுவதற்காக எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் இலங்கையிலிருந்து புறப்படவுள்ள இந்தக் குழு, இலங்கையிலிருந்து ஹெய்டி செல்லும் 17ஆவது குழுவாகும்.

இந்த 610 பேரில் 49 அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர். இவர்களுக்கான பயிற்சிகள் குக்குலேகங்க இராணுவ முகாமில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.